

கடமை-கண்யம்-கட்டுப்பாடு என்ற அண்ணுவின் மூன்று பொன்மொழிகளே மறவாது. அரசியல்-சமுதாயம்-பொருளா தாரம்-என்ற மூன்று துறைகளில் பணி யாற்றும் தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளா பதவியை ஏற்றுக் கொண்டு பொறுப்புடன் தொண்டாற்றுவேன் என்று உறுதி கூறுகிருர்.

நாவலர் நெடுஞ்செழியன்

Best copy available




கொள்கை விளக்கம்

# நாட்டைக் கொடுங்கள் - பின் கோட்டை அழிக்கிறோம்!

**அன்புள்ள குமார்,**

நீ சென்னைக்கு வந்ததாகவும், என்னைப் பார்க்காமலேயே நீ திரும்பி விட்டதாகவும் நண்பர் சொல்லக் கேள்விப்பட்டேன். உண்மைதான்!

அறிவுக்கு உணவு வழங்கும் மியூசியம், அழகுச் சுவை கொட்டும் கடற்கரை — இவைகளையெல்லாம் நீ எங்கே பார்த்திருக்கப் போகிறாய்? போர்க் காலத்திலே முளைத்த புதிய பணக்காரர்களைப் போல, அந்த சீசனிலே திடீரென்று எழுந்த வடபழனியாண்டவன் கோவிலுக்கல்லவா நீ போயிருப்பாய்? திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலிலே கை கூப்பி, கண்ணீர் சிந்தி, கடவுளிடம் "கருணை மனு" போட்டுவிட்டு, அங்கிருந்தபடியே ஊர் திரும்பியிருப்பாய்! உனக்குத் தெரியுமா குமார், நீயும், உன்னைப் போன்ற பக்த கோடிகளும் ஆட்டு மந்தையைப் போல கூட்டம் கூட்டமாய் சேவித்து வருகிறீர்களே, அந்தப் பார்த்தசாரதி கோவிலிலே தான் முன்னொரு சமயம் கிளைவின் சைன்யம் பீரங்கிகளைப் பதித்து, கோவில் மதில்களை கோட்டை மதில்களாக்கிக் கொண்டு, பிரெஞ்சுக்காரர்களை எதிர்த்து நின்றதாம். ஆங்கிலேயர் அமைத்துக் கொண்ட அத்தகைய பாடி வீட்டிலேதான் நீ அறிவை இருட்டாக்கிக் கொண்டு ஆண்டவனைப் பிரார்த்தித்திருக்கிறாய். வெட்கம்! வெட்கம்!! கோவிலை யார் யார் எப்படியெப்படி பயன்படுத்துகிறார்கள் பார்த்தாயா? உன் போன்ற மண்டூகங்கள் இருக்கும்வரை—படித்திருந்தும் பக்குவம் பெறாத சோம்பேறிகள் வாழும்வரை, கோவில்கள் சனாதனக் கோட்டையாகத்தான் இருந்து வரும். அந்தக் கேடு களைவதற்குத்தான் நான் உனக்கு அடிக்கடி அறிவு விளக்கம் தந்து வருகிறேன்.

குமார்! நீ சென்ற கிழமை நிதி அமைச்சர் சுப்ரமண்யம் கோவையிலே பேசிய பேச்சைக் கேட்டாயா? தனித் திராவிடம் கேட்பது மடமையாம்! 'ஒரே உலகம்' என்கிற உயர் லட்சியம் நோக்கி உலகம் உருண்டுகொண்டிருக்கும் போது, இங்கு திராவிடநாடு பற்றி கோரிக்கை எழுப்புவதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லையாம்!—ஏதோ உலகம் சுற்றிய வெண்டல் வில்கீயைப் போல "இதோபதேசம்" செய்ய வந்துவிட்டார், இந்தியாவுக்கு அப்பால் என்ன நாடு இருக்கிறது என்பதை 'அட்லாசின்' துணையில்லாமல் அறிய முடியாத வீரர்!

ஒரே உலகம் இன்று மட்டுமா கேட்கப்படுகிறது? 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ந் தேதிக்கு முன்னரேதானே அந்த முழக்கம் காற்றிலே கலந்து இந்த தேசிய வீரர்களின் காதுகளைக் குடைந்திருக்கிறதே! ஒரே உலகம்—என்கிற தலைப்பில் எச்.ஜி. வெல்ஸ் போன்ற பேரறிஞர்கள் புதுப்புதுக் கருத்துக்களை வாரி வழங்கியதற்குப் பின்னர்தானே சீனாவிலே சியாங்கே ஷேக்கை எதிர்த்து மாசேதுங் செந்நீர்த் துளிகளை ஆறாகப் பெருக்கினான்! அப்போதெல்லாம் காது கொடுத்து கேட்கப்படாத தத்துவம் இன்று மட்டும் நம்மிடையே காரம் குறையாமல் நீட்டப் படுவானேன்? அப்போதெல்லாம் ஊமையாய், ஒரு பொருளும் தெரியாத சிறு குழந்தையாய் வாழ்ந்த 'நீள் செவியார்' இன்று ஏன் கத்துகிறார்? நம்முடைய இலட்சியபுரிக் கோட்டையின் வாயிலை ஏன் இப்படி பதை பதைக்கத் தட்டுகிறார்?

'உலகத்துக்கு ஒரு அரசாங்கம் தேவை; ஏனைய நாடுகளெல்லாம் உலகமென்னும் பரந்த சாம்ராஜ்யத்தின் மாகாணங்களாக இருக்கட்டும்!'—என்ற முழக்கம் எக்காள ஓசையைப்போல் ஜெகமெங்கும் ஒலித்ததே, அந்த நேரத்தில் தானே ஜின்னா பாகிஸ்தான் கேட்டார்—பெற்றார்! இப்போது நாமும் கேட்கிறோம்; இதிலென்ன தவறு இருக்கமுடியும்?

இன்னொன்று கேட்கிறேன், அதற்கும் இந்தக் கோவைக் கிழார் பதில் சொல்லட்டும். கோலாரின் தங்கச் சுரங்கத்தையெல்லாம் கோலோச்சும் வெள்ளைக்காரக் கொள்ளையர், காலனி ஆதிக்கம் என்னும் பெயரிலே தாயகம் கொண்டு செல்கின்றனரே-என்று இடியோசை கிளப்பினார்களே இன்று 'உலகம்' பேசும் உத்தமர்கள், அப்போது சுப்ரமணியனார் முன் வந்து, "எனதருமை தேசியத் தோழர்களே! சுதந்தரம் வேண்டி சிங்கப்பூர் சென்று சைன்யம் சேர்த்த எனதன்பு சுபாஷ் சந்திரரே! தாய்நாட்டின் தளையுடைக்க தூக்கு மேடையிலே சூடேறிய தன் இரத்தத் துளிகளை அள்ளித் தெளித்த பகவத் சிங்கரே! வெள்ளையன் சுரண்டுவதாக ஏன் இப்படி புரட்சி செய்கிறீர்கள்? வெள்ளையன் என்ன செய்துவிட்டான்? இங்கிருக்கும் பொருள்களையெல்லாம் உலகத்தின் ஒரு மூலையிலிருந்து எடுத்துச் சென்று, இன்னொரு மூலையில் கொண்டு போய்த் தானே வைக்கிறான்; இதிலென்ன தவறு?" — இப்படி இடிக்குரல் கொடுத்தாரா, இப்போது தடித்த நாக்கை உபயோகிக்கும் சுப்ரமணியனார்? அப்போது உடைபடாத 'ஒரே உலக'த் தத்துவம் இப்போது நாம் திராவிடநாடு கேட்பதால் மட்டும் உடைந்து சுக்கு நூறாகி விடுமா?

அன்புள்ள குமார்! நிதி அமைச்சரின் பேச்சுக்கு நான் இப்படி மறுப்பு தீட்டுவதால் 'ஒரே உலகம்' என்கிற திட்டத்தில் எங்களுக்கு எள்ளளவும் நம்பிக்கையில்லை என்கிற முடிவிற்கு வந்துவிடாதே! உலகம் ஒன்றாக வேண்டியதுதான். போரும் புகைச்சலும் ஒழிய அரசியலிலே அந்த நிலை ஏற்பட வேண்டியது அவசியம் தான்! ஆனால் அதற்காக சிறு நாடுகளின் சுதந்தரதாகத்தை அடக்கிவிடுவது சரியாகுமா? ஒரு மாபெரும் சமுதாயத்தின் உணர்ச்சிகளுக்கு விலங்கு பூட்டுவது விவேகிகளின் செயலாகுமா? கூடாது, குமார், கூடாது! எண்ணற்ற மக்களின் விடுதலை வேட்கையை, சுப்ரமணியனார் போன்ற கண்ணற்ற குருடர்கள் 'ஒரே உலக'த்தைக் காட்டி ஒழித்துக்கட்ட முனைவார்களேயானால், மேலை நாடுகளின் பேரறிவாளர்களும், பெருமை கொள் அறிஞர்களும், இந்தத் தத்துவத்தை நிச்சயம் 'வாபஸ்' பெற முன் வந்து விடுவார்கள்!

இன்னும் சரியான விளக்கம் தருகிறேன், கேள், குமார்! பாத்திகளுக்கு வரப்பமைத்துதானே நீர் பாய்ச்ச முன் வர வேண்டும்? அதைப் போலத்தான் நாங்களும், 'சின்னஞ் சிறு நாடுகளின் உரிமைக் குரலைக் காது கொடுத்து கேளுங்கள். அவர்களது கோரிக்கைக்குத் தகுந்தபடி எல்லைக் கோடுகளை மாற்றி எழுதுங்கள். பின்னர் 'ஒரே உலக' நீரைப் பாய்ச்சுங்கள்!'—என்று முழங்கி வருகிறோம்.

நாளை நாங்கள் திராவிடநாடு பெற்று, நாளை மறு நாள் ஐக்ய நாடுகள் சபையிலே 'உலகம் முழுவதும் இனி ஒரே நாடு; அதற்கெல்லாம் ஒரே அரசாங்கம்'—என்கின்ற புரட்சித் திட்டம் ஏக மனதாக நிறைவேறுமேயானால், அன்புள்ள குமார், நாளை மறுநாளே நாங்களும் உலகத்தின் ஏனைய நாடுகளைப் போல எங்கள் எல்லைக் கோட்டை அழித்து விடுகிறோம். அதற்குப் பின் 'நாங்கள் திராவிடர்கள்' என்று சொல்லிக் கொள்ள மாட்டோம்; 'நாங்கள் திராவிடத்தின் பிரஜை' என்று மார் தட்ட மாட்டோம்! 'மனிதன்' என்று சொல்லிக் கொள்வோம்; 'உலகத்தின் பிரஜை' என்று பெருமைப் படுவோம்!

இப்போது புரிந்ததா, குமார், எங்கள் பிரச்சினை? 'முதலில் திராவிட நாட்டைக் கொடுங்கள்; பின்னர் எல்லோரும் சேர்ந்து உலக அரசாங்கம் அமைப்போம்' — என்றுதான் சொல்லி வருகிறோம்! சட்டங்களைக் கரைத்து குடித்திருந்தும், இந்தச் சிறு அறிவு கூடத் தெரியாத—அல்ல; அல்ல; தெரியாதவர்போல் நடிக்கும் நிதி அமைச்சர் உண்மை உணர வேண்டும்! உணர்வாரா அவர்? அடுத்த கடிதத்தில் உன்னைச் சந்திக்கிறேன்.

அன்புள்ள,
பொன்முடி.



**தோழர் சம்பத்**
**(கோவை மாவட்ட தி. மு. க. செயலாளர்)**

வன் துரோகி.

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 29—4—55 வெள்ளி

## வாழ்த்துகிறோம்; வரவேற்கிறோம்!

தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளர் பதவிக்குப் பலத்த போட்டியிருக்கும்—கழகத்திலே பெரும் பிளவு தோன்றுவதற்கு அந்தப் போட்டியே வித்தாக அமைந்துவிடும்-என்றெல்லாம் யூகங்களை வெளியிட்டு ஏடு விற்பனைக்கு வழி தேடியவர்களுக்குத் தக்க பதில் தரும் விதத்திலே-சென்னையில் பொதுக்குழு கூடியது. திராவிடரின் இருதயத்திலே இன உணர்ச்சி கீதத்தை எழுப்பிய வெள்ளுடை வேந்தன் வீரத் தியாகராயரின் பெயரால் எழுந்துள்ள கல்லூரி மண்டபத்திலே கழகத்தின் செயலாற்றும் காளையர் திரண்டனர். பொதுச் செயலாளர் தேர்தலை ஆர்வத்தோடு நடத்தினர்.

ஆறு ஆண்டுகாலமாக தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்து பணி பல புரிந்த அறிஞர் அண்ணா அவர்கள், புதிய பொதுக் குழுவை வரவேற்று மகிழ்ந்ததோடு, எதிர்காலத்து நடவடிக்கைகளிலே தி. மு. கழகம் எவ்வளவு பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டுமென்பதையும் சுட்டிக் காட்டினர்.

கழகத்தின் செயல்களை நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளுமே உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள். கழகத்தைப் பற்றிய யூகங்களைத் தெரிவிக்கிறார்கள். இந்நிலை நமது கழகம் வளர்ந்திருக்கிறது, வளர்ந்து கொண்டே போகிறது என்ற செய்தியைத் தெரிவிக்கும் நிலையாகும்—என்பதாக அண்ணா அவர்கள் குறிப்பிட்டதை நெஞ்சிலே பதித்துக் கொள்ள வேண்டும். நாம் மட்டுமல்ல; நம்மைப்பற்றி ஏதாவது நல்லதோ, கெட்டதோ சொல்லித் தீரவேண்டும் என்ற அளவிலே உள்ளவர்களும்கூட!

ஆறு ஆண்டுகாலம் பொதுச் செயலாளர் பொறுப்பை வகித்தேன்-புதிய பொதுக்குழு, புதிய பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்—வேறு கட்சிகளைப் போல தனிப்பட்டவர்களின் செல்வாக்கினால் மட்டுமே வளர்ந்து தீரவேண்டிய கழகமல்ல நம்முடையது—தனிப்பட்டவர் செல்வாக்கு மட்டுமன்றி, தனக்கென அமைந்துள்ள அருமையான கருத்துக்கள், செயல்முறைகள், கொள்கைகள், இவைகளாலேயே பலம் பெற்று வளரக்கூடிய அந்தஸ்து பெற்றது நமது கழகம்-என்ற கருத்துக்களை அண்ணா அவர்கள் அழகுபட எடுத்துக் காட்டியதோடு, ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கும் வகையில், பொதுச் செயலாளர் இடத்தில் அமர இன்னொருவருக்கு வாய்ப்பு அளிக்கும்படியாகப் பொதுக்குழுவைக் கேட்டுக் கொண்டார். வாய்ப்பு அளியுங்கள் என்ற வாசகமுரைத்து, அந்த நல்ல வாய்ப்பையும் தானே வலுவிலே அளித்து, தேர்தல் நடைபெறட்டும் என்று கூறியபோது, அண்ணா அவர்கள் கழகத்தினருக்கு கடமை, கண்யம், கட்டுப்பாடு ஆகியவற்றின் அடிப்படையிலே அளித்த ஜனநாயக ஓவியத்தை யாரும் மறந்துவிட முடியாது.

முப்பதாண்டு காலமாக திராவிடத்திலே நடைபெறும் இன எழுச்சிப் போராட்டத்திலே புதியதோர் விறுவிறுப்பை அளித்து, படையைப் பெருக்கிய தளபதி அறிஞர் அண்ணா ஆவார்கள். பெரியார் ராமசாமி அவர்களின் பெரும் படையிலே, கல்லூரிக் காளையரும், கலையுலகத் தோழர்களும், ஏறுநடை இளைஞர்களும், எழுத்தாள நண்பர்களும், ஓடிவந்து குவிந்தார்கள் என்றால், அது அண்ணாவின் பிரவேசத்திற்குப் பிறகுதான் என்பதை யாரே மறுக்க வல்லார்? சுயமரியாதைக் கருத்துக்கள் கல்லூரிக் கதவுகளைத் தட்டி, எதிர் முகாமிலேயிருப்பவர்களின் இருதயத்திலும் இடம் பிடித்துக் கொண்டு வெற்றிக்கொடி பறக்கவிட்டதற்குக் காரணம் அறிஞர் அண்ணா அவர்களின் சலியாத உழைப்பேயாகும். சொல்லால், செயலால், எழுத்தால், நடிப்பால், திட்டத்தால், தீவிரப் போராட்டங்களால், திராவிடத்திலே புதிய பொலிவும் வலிவும் உதயமாகச் செய்த உத்தமர் அறிஞர் அண்ணா ஆவார்கள். பெரியார் அவர்களிடமிருந்து தாங்கொணா வேதனை சுமந்து, தத்தளித்துப் பிரிந்த போது, அண்ணா என்ற அந்த மூன்றெழுத்துச் சொல்தான் நமக்கெல்லாம் ஆறுதல் வழங்கக் கூடியதாக—கலங்கியவருக்குக் கைகொடுக்கக் கூடியதாக—கண்ணீர்த் துளிகளுக்கு மதிப்பளிக்கும் தன்மையுடையதாக அமைந்திருந்தது. அன்று முதல் இன்று வரையிலே தி. மு. கழகத்தின் பொறுப்புமிக்க பதவியிலே அமர்ந்து, கழகத்தின் மீது நடைபெற்ற தாக்குதல்கள் அத்தனையையும் சமாளித்து வெற்றி பெற்றார்.

ஆயிரம் எதிர்ப்புகள் வரினும் அலட்சியமாக சிரித்துக்கொண்டிரு-நீ எடுத்துக்கொண்டிருக்கிற பெரிய காரியத்திற்கு இடையூறுகள் வராமலிருக்காது! நல்ல காரியம் செய்கிறோம்—நாலு பேர் தூற்றுவதைப் பற்றிக் கவலையில்லை என்று எண்ணி நடந்துகொண்டேயிரு!—என்ற விதத்திலே அறிவுரைகள் கூறி கழகத்திலே அமைதி காத்தார். கழகம் களத்திலிறங்கிய நேரத்திலும் கண்யம், கட்டுப்பாடு தவறாமல் பாதுகாத்தார். அத்தகைய பெருந்தகையாளருக்கு, தி. மு. கழகத்தின் பொதுக் குழு, தனது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு, இன்னும் அவரது அறிவுரைகளை ஏற்று நடக்க உறுதி எடுத்துக்கொண்டு, புதிய பொதுச் செயலாளராக நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

நெடுஞ்செழியன் — நடமாடும் பல்கலைக் கழகம். இலக்கியக் கனி. உழைப்பின் உருவம். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நமதியக்கத்திற்குத் தந்த நன்முத்து. திராவிடர் கழகத்திலே பெரியார் அவர்களோடு நெருங்கிப் பழகிடும் வாய்ப்பு பெற்று — திராவிட முன்னேற்றக் கழகத்திலே இந்நாள்வரை துணைச் செயலாளராகப் பணியாற்றிடும் பேறு பெற்று — கழகத்தினரின் உள்ளத்திலே குடியேறியிருக்கும் கொள்கை வீரன். குள்ளநரிச் செயல் புரியும் கூட்டத்தின் கூற்றம்.

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

## ★ மகாபாரதம் - [தொடர் சித்திரம்] - 7 ★






சேறெடுத்து வாஎன்றாள். உடனே, தோழி,
தென்னாட்டுச் சந்தனத்தைக் கொண்டு வந்தாள்.
சோறெடுத்து வாஎன்றாள். செடிஅ ரும்பைத்
தோழிப்பெண் தந்திட்டாள் இளைத் திருக்கும்
ஆறெங்கே? என்றிட்டாள். அறைக்குள் சென்று,
அருவிநிகர் மேலாடை எடுத்து வந்தாள்
மீறியெழும் ஆசையொடு; அணங்கே, யாழை
மீட்டென்றாள் பூங்கோதை என்னும் தாசி.

பனிஇரவின் சிறுபொழுதில் சிறிது நேரம்
பாகுதமிழ் இசைபாடி மகிழ்ந்தாள். தோழி,
இனிஎனக்கு வேண்டுவதோ தூக்கம். நீபோய்
ஏற்பாடு செய்என்று எழுந்தாள். பின்னர்க்,
குனிந்ததொரு வில்லெடுத்தப் பாண்டி வேந்தன்
கொலுப்பதுமை போன்ற அவள் உறங்க லானாள்.
மனிதரிலே தரித்திரர்கள் — கள்வர் என்போர்
வந்தார்கள் வீட்டுக்குள், கன்னம் வைத்து.

சோலைதரும் நீலமலர் அழகு மங்கை,
சோர்ந்ததொரு மலர்போலக் கிடந்தாள். வண்ணச்
சேலையொடு மேலாடை, கூந்தல் ஒன்றும்,
சிறிதேனும் அன்றிரவு கலைய வில்லை.
காலடியை மெதுவாக ஊன்றி, சத்தம்
காட்டாது ஓர்கள்வன் மஞ்சம் வந்து,
கூவிஉடல் பூங்கோதை தனைஎ ழுப்பிக்
கூர்வாளை முன்காட்டி மிரட்டி நின்றான்.

வட்டவடி வானபொருள் தந்தால், வீட்டில்
வரவேற்று, உடல்ஒட்டச் சம்ம திக்கும்,
பொட்டழகி, பொய்வசனக் காரி தன்னைப்,
பொட்டலத்து மார்பின்கீழ் கயிறு கொண்டு
கட்டிவைத்தார் யானைக்கால் தூணில். பின்னர்க்
களவாடல். அதுதீர்ந்து திரும்பும் போது,
கட்டுண்ட பூங்கோதை கனிஉ தட்டில்,
காசுதரா மல்முத்தம் இட்டுச் சென்றார்.

கோத்தமல ரே! கனியே! உனக்கு என்னைக்
கொடுத்திட்டேன் எனக்கூறி, இதழில் முத்தம்
வைத்திடுமுன் என்கரத்தில் மின்னும் பொன்னை
வைத்திடுவர் இதுநாளும். இன்றோ, செல்வச்
சத்துமுழு தும்இழந்தேன். இலவ சத்தில்,
சாறெடுத்தும் சென்றார்கள் உதட்டில்; என்று,
மெத்தைமுழு தும்நனைய அழுதாள்; கண்ணீர்
வேதனையை அவ்வீட்டார் குறைத்து வந்தார்.

இரவினிலே, இல்லத்தில் மழையை—மங்கை
இருவிழியும் பெய்வதனைக் கண்டு, அங்கே
வருபவர்கள் ஏதேதோ உரைத்தும்; கேட்க
வனிதைக்கு அப்போது காதே இல்லை
இருள்வைத்து இருந்திட்ட அவ்வூர்; மக்கள்
எதிர்வைத்துக் காட்டிற்று நெருப்பு வெய்யில்.
பரிதாப நடையோடு, முக்கா டிட்டுப்
பரத்தைப்பெண் நீர்வடிய நடந்து சென்றாள்

சீதநிலா முன்புறத்தில் சிரிப்பு இல்லை.
சிந்தும்மழைப் பின்புறத்தில் அரும்பு இல்லை.
மாதுளம்பூ வாயிதழில் விரிவு இல்லை.
வதனத்தில் வட்டமிடும் பொட்டு இல்லை.
காதினிலே தோடில்லை சேர்த்த ணைக்கும்
கரந்தன்னில் சரிவதற்கு வளையல் இல்லை.
பாதத்தில் கண்ணகியின் நகைகள் இல்லை.
பாட்டில்லை அதனாலே, நடக்கும் போது!

புதுப்புனலும் பூங்குழையார் நட்பும் — என்னும்
பொருளுடைய பாட்டுக்குத் தலைவி என்றாள்.
நிதிக்காகச் சிரிப்பவளோ என்று, அந்த
நீலவிழிப் பூங்கோதை தன்னைக் கேட்டான்.
அதுவேதான் எனதுதொழில். என்போன் றோர்க்கு
அங்கந்தான் மூலதனம், என்று ரைத்தாள்.
எதற்காக அழுகின்றாய் பெண்ணே? என்று
இசைகேட்டு வசமாகும் வள்ளல் கேட்டான்

தனத்தின்மேல் மனம்வைத்து வந்தால், என்சந்
தனத்தின்மேல் கைவைத்துக் கொடுத்து; வந்தோர்
தனத்தின்மேல் கைவைப்பேன். இதுவே என்றும்
தவறாத வாடிக்கை. இன்றோ, எந்தன்
தனத்தின்மேல் கைவைத்து விட்டார் கள்வர்,
சபையோரே! என்செய்வேன் என்றாள். பொன்ஆ
தனத்தின்மேல் இருந்திட்டோர், இதனைக் கேட்டுச்
சரிதானே அவர்செய்கை, அதற்கேன் கண்ணீர்?

உன்பேச்சுப் படிபார்த்தால், இரவில் வந்தோர்,
ஒருகூடைப் பொன்கொட்டிக் கொடுத் திருப்பார்.
கன்னத்தைத் தந்திருப்பாய். பின்னர், மற்றக்
காரியமும் வழக்கம்போல் நடந்தி ருக்கும்.
சின்னஉடல் பொன்பெற்ற பின்பு, முல்லைச்
சிரிப்பன்றோ தரவேண்டும் உதட்டில்? நீயோ,
கன்னத்தில் நீர்க்கோடு, குரலில் துக்கம்
காட்டுகிறாய், இதுமிகவும் வியப்பே — என்றார்.

பெரியோரே! புலவோரே! முதிர்ந்த கல்விப்
பேச்சறிந்த சபையோரே! கள்வர்க் கூட்டம்,
வருமானப் பொருள்தந்து இருந்தால், எந்தன்
வரிவிழியில் நீர்வருமா? வருந்து வேனா?
உரிமையுள என்பொருளை; கொலைக்கூட் டத்தால்
ஊர்தூங்கும் இரவினிலே இழந்தேன். அந்தோ!
பொருளற்றேன். நீர்சாய்ந்த குடம்போல் ஆனேன்.
பொய்யில்லை; இதுஉண்மை என்று ரைத்தாள்

மாங்காயின் ஆரம்பப் பருவ மான,
வயதாகாச் சிறுபிஞ்சு விழிப டைத்த
பூங்கோதை, புலவர்சபை தன்னில், தந்த
பொருள் தேங்கும் கவிதைபதில் தன்னைக் கேட்டுத்
தாங்காத மகிழ்ச்சியொடு வள்ளல்; பொன்னைத்
தந்திடுக இவள்பாட்டுத் தமிழுக் கென்றான்.
நீங்கிற்று அவள்விழிநீர் புன்சி ரிப்பு,
நிலவிற்று, வாயிதழில், பொன்னைக் கண்டு.

நீமிகவும் பேரழகி! இதனை, வீட்டின்
நீள்சதுரக் கண்ணாடி உனக்குக் கூறும்.
பூமியிலே நல்லொழுக்கம் உடையோர் — உன்னைப்
பொருள்கேட்கும் மேடையென்பர். பரத்தை என்பர்.
காமுகரோ, முத்தமிடும் உதடு தன்னைக்
கற்கண்டு கனிச்சாறு கரும்பு என்பர்.
**நாமிங்கு, உன்னைப்போற்றிப் புகழு தற்கு**
**நற்றமிழின் திறனன்றி வேறொன் றில்லை.**

அழகில்லை யாஎனக்கு? என்று கேட்பாய்.
அழகிருந்து என்னபயன், கற்பில் லாமல்,
பிழைசெய்து வாழ்பவள்நீ. இரவில், எச்சில்
பெருக்குகின்ற தொழில்புரியும் பரத்தை காகம்
கிழிக்கின்ற வாழையிலை, என்று ரைத்தான்.
கெண்டைவிழி மங்கைஇதைக் கேட்டு, என்னைப்
பழிக்காதீர். இதுபோதும் கெட்டேன்! கெட்டேன்!
பாரினிலே இழிச்சொல்லைப் பெற்றேன்! பெற்றேன்!

இரும்படிக்கும் கொல்லர்களின் உலைக்க ளத்தில்
இருக்கின்ற பழங்காலத் துருத்தி போன்று,
உருவுள்ள நாரைகளும், கொக்கும், சேர்ந்து
உயிர்வாழும் குருகூரில், குடவர் என்னும்
பெரியாரின் இல்லத்தில், பன்னி ராண்டு
பைந்தமிழைக் குறைதீரக் கற்றுத் தேர்ந்தேன்.
வரிநான்காம் நாலடியும், அதனின் பாதி
வரியுடைய திருக்குறளும் படித்தும் கெட்டேன்.

ஓரிரவில் ஆயிரம்பாட் டெழுதும் சக்தி
உள்ளபெரும் புலவர்களின் முன்அ மர்ந்து,
பேரறிஞன்; கொடைவள்ளல்; சீதக் காதி;
பலபேசி, தன் பேச்சை முடிக்கும் போது;
ஈரமுகம் தனைக் காட்டி வழங்கும் வள்ளல்
எதிர்நின்றாள் பூங்கோதை அன்னோன் பார்த்து,
யாரம்மா நீ என்றான்? கவிதை யாலே
அழகுமகள் பதில்கூறத் தொடங்கி விட்டாள்.




அகலிகைபோல் வாழ்வினிலே கற்பி ழந்தேன்.
ஐவர்க்கும் ஓர்போர்வை போலி ருந்து,
சுகங்கண்ட பாஞ்சாலி போலக் கெட்டேன்.
சூரியகா லத்தில்ஒரு குந்தி யானேன்.
செகமெங்கும் இழிவாகப் பேச, சீதைச்
செயல்புரிந்து நான்சேறு ஆகி விட்டேன்.
முகங்காட்டக் கூடாத எனக்கு, இந்த
முக்காடு ஓர்கற்பா? எனஎ டுத்தாள்.

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# பாரதிதாசன் சிறந்த உரையாசிரியர்

நாரண-துரைக்கண்ணன்



பாரதிதாசன் தமிழ் நாட்டின் தலைசிறந்த கவிஞர் என்பதுதான் பெரும்பாலோருக்குத் தெரியும். அவர் நல்ல உரை நடையில் நாடகங்களும், சினிமாவுக்குக் கதை வசனங்களும் எழுதுபவர் என்பதும் பலர் அறிவர். ஆனால், அவர் ஒரு சிறந்த உரையாசிரியர் என்பது அநேகமாக யாருக்கும் தெரியாதென்றே நம்புகிறேன். ஒரு வேளை அவர் மேடைகளில் சொற்பொழிவு ஆற்றி வருவதைக் கேட்டு வருபவர்கள், பழந்தமிழ் இலக்கியப் பாடல்களுக்கும் கவிதைகளுக்கும் விளக்கம் கொடுப்பதைக் கேட்டு, பள்ளித் தமிழாசிரியராயிருந்தவர் என்ற முறையில் ஏதோ விரிவுரை செய்கிறார் என்றுதான் கருதுவார்கள்.

★

உண்மையில் கவிஞர் பாரதிதாசன் இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், நக்கீரர், மணக்குடவர், பதுமர், தாமர் முதலிய பழைய உரையாசிரியர்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்க சிறந்த உரையாசிரியராவர் என்று நான் உரைக்குங்கால், யாரும் இதைஉயர்வுநவிற்சியாக கருதக்கூடாது. அது நூற்றுக்கு நூறு உண்மை என்பது, பாரதிதாசன் அவர்களுடைய திருக்குறள் உரை நூல் வெளிவந்ததும்தான் தமிழ்ப் பேரறிஞர்களுக்கு நன்கு தெரியும்.

★

நான் மிக இளமையிலிருந்தே திருக்குறளையும் அத்தமிழ்மறை நூலுக்கு எழுதப்பட்டுள்ள பல உரைகளையும் படித்து வந்திருக்கிறேன். திருக்குறள் விளக்கம் ஆசிரியர் குப்புசாமி முதலியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், மறைமலை அடிகளார் முதலியோரிடம் திருக்குறள் பாடம் கேட்டிருக்கிறேன். ஆதலால், திருக்குறள் குறித்துவரும் எந்த நூலையும், உரைகளையும், ஆராய்ச்சிகளையும் கூர்ந்து கவனிப்பேன். குறள் பற்றிய சொற்பொழிவுகளை யார் செய்தாலும் போய்க் கேட்பேன்.

★

உலகப் பொது மறையாம் திருக்குறளுக்குப் புத்துரை எழுதுகிறேன், புதுமையுரை செய்திருக்கிறேன் எனப் பலப் பலர் பல காலங்களில் பம்மாத்துச் செய்து வந்ததையும் பார்த்து வந்ததுண்டு. நம் நாட்டில் சில நல்ல கட்சிகளும் தனி மனிதர்களும் தோன்றி, மக்களிடையே ஏற்படுத்தியுள்ள விழிப்புணர்ச்சியையும், மொழிப் பற்றையும், இனப் பற்றையும் பயன்படுத்திக் கொண்டு, பணம் சம்பாதிக்க முயலும் சிலர் குமரியுரை என்றும், கிழவர் உரை என்றும், பண்டிதர் பேருரை என்றும், புலவர் பொழிப்புரை என்றும் சொல்லி அவ்வப்போது வெளியிட்டுக் குவித்துவரும் குப்பைகளைக் கண்டு என் மனம் வெதும்பும். ஒட்டக்கூத்தரோ, பிள்ளைப் பாண்டியனோ, சீத்தலைச் சாத்தனாரோ இக்காலத்தில் இருக்கக்கூடாதா என்றும் எண்ணுவதுண்டு.

இவ்விதம் என்போல் எண்ணியெண்ணி நைந்த தமிழ் உள்ளங்களுக்கு இன் சுவைய முதமாக அமைவது பாரதிதாசனின் திருக்குறள் உரை நூல் என்றால் அது ஒரு சிறிதும் மிகையாகாது. கூடிய சீக்கிரம் நூல் வடிவில் வெளிவர இருக்கும் அவ்வுரை நூலைப் பார்த்த பின்னர்தான் நான்இது குறித்துக் கூறிய கருத்து முற்றும் சரியே என அறிஞர்களும் பிறரும் ஒப்புக் கொள்ளுவார்கள்.

பாரதிதாசன் திருக்குறள் என்னும் ஒப்பற்ற நீதிநூலுக்கு ஒரு நல்ல உரையை-நடுநிலையான உரையை எழுத எவ்வளவு ஊக்கமும் முயற்சியும் எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பது, ஓரிடத்தில் உரைக் குறிப்பு ஒன்றுக்கு ஆதாரங் காட்டுவதற்காக, சாங்கிய நூலொன்றைத் தேடி ஓராண்டாகத் தமிழ்நாடு முழுதும் சுற்றிவந்தார் என்பதை அவர் வாயிலாகவே கேட்டபோது எனக்கு வியப்பு மட்டுமல்ல; விம்மிதமும் உண்டாயிற்று. இத்தகைய உரையல்லவா திருக்குறளுக்கு இன்று வர வேண்டும்? ஓதியுணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும்வரும் ஒப்பற்ற கவிஞனின் கருத்து நிறைந்த உரையல்லவா திருக்குறளுக்கு அமைய வேண்டும்?

★

சென்ற தைப் பொங்கலன்று நான் என் நண்பர்கள் சிலருடன் புதுவைக்கு சென்று, கவிஞர் பாரதிதாசனைக் காண நேர்ந்தது. அவ்வமயம், நானும் என் நண்பர்களும் விவகாரத்துக்குரிய குறள்கள் சிலவற்றுக்கு, பாரதிதாசனிடம் விளக்கங்கேட்டோம். பரிமேலழகர் போன்ற பழைய உரையாசிரியர்களும், பழம் பண்டிதர்களும் நீண்ட காலமாகக் கூறிவந்த அர்த்தங்களை மறுத்து, பாரதிதாசன் கூறிய புத்துரை அறிவுக்கும் காலவர்த்தமானத்துக்கும் பொருந்துவதாகஇருந்தது. அவருடைய உரைக் குறிப்பில் காணப்பட்ட கருத்துச் செறிவும், பொருள் நயமும்,புதுமையும், இலக்கணக் குறிப்பும், எனது தமிழ்ப் பேராசிரியர் மறைமலையடிகளார் எங்களுக்கு அருங்குறள் குறித்துப் போதித்த விளக்கங்களை நினைவுபடுத்துவனவாயிருந்தன.

அதிகம் விவரிப்பானேன்! வெகுவிரைவில் வரவிருக்கும் பாரதிதாசன் திருக்குறள் புத்துரையை நீங்கள்தான் பாக்கப் போகிறீர்களே!

★



தோழர் கே.வி.கே. சா[illegible]
([illegible] மாவட்ட [illegible] செயலாளர்)

# கவனமிருக்கட்டும்!

நாடாளும் அமைச்சர்கள்—பொதுமக்கள் பணத்திலிருந்து ஊதியம் பெறும் உத்தமர்கள்—இருக்கவேண்டிய இடம் எது? பரிசீலிக்க வேண்டிய பிரச்சினைகள் யாவை?

பாராளுமன்றம் என்பர்; நாட்டு நலன்காணும் திட்டங்கள் என்பர்; அரசியல் நெறி உணர்ந்தோர்!

ஆனால் ஜனநாயகக் குழந்தைகளைத் தட்டிக்கொடுக்கிற தேசிய வீரர்களின் சபாமண்டபத்திலோ கோலோச்ச வேண்டியவர்கள் கொலுமண்டபத்தில் இருப்பதில்லை — கோடையின் வெப்பம் தணிக்க குளிர்ப் புனல் தேடி ஓடிவிடுகின்றனர்!

ஏப்ரல் 20-ந் தேதியன்று டில்லி பாராளுமன்றத்திலே ஜனநாயகத்தை எள்ளி நகையாடும் செயலொன்று நடந்தேறியிருக்கிறது. அன்றையதினம் மன்றத்தின் விவாதத்தைக் கவனிக்க மந்திரிகள் மருந்துக்குக்கூட ஒருவர் அகப்படவில்லையாம்! உதவி சபாநாயகர் ஆத்திரம் மேலிட்டு விழிகளை உருட்டினாராம் — புருவத்தை நெறித்தாராம்!

என்ன பயன்? லோக் சபாவை 'ஷோக் சபா'வாக்கிக் கொண்டு, அரசியல் கூத்தாடும் தேசியக் கோமாளிகளல்லவா இன்று நம் காவலர்களாயிருக்கிறார்கள்? மந்திரிகள் இல்லாமல் விவாதங்கள் நடப்பது ஜனநாயக வேரிலே வெண்ணீர் ஊற்றுவதினும் வேதனைத் தரும் செயலாயிற்றே என்கிற சாதாரண நினைவுகூட இல்லாமல் ஊர் சுற்றக் கிளம்பிவிட்டார்கள். உல்லாசத்தை உராய்ந்து கொண்டிருப்பதிலே சுகம்காணும் செல்வர்கள்!

கவனமிருக்கட்டும்! — இந்தக் கடமை மறந்தவர்களுக்கெல்லாம் நாம்தான் மாதச் சம்பளமும், அலவன்சுகளும் தருகிறோம்!

★

எந்த இடத்தில் நாங்களிருக்கிறோம் என்றே சொல்ல முடியாது. எந்த நேரத்தில் எங்களது முகாம் வேறிடத்துக்கு மாற்றப்படும் என்றும் கூறமுடியாது. எப்போது நாங்கள் சாவோம்; அல்லது சாவிலிருந்து மீள்வோம் என்றும் கூறமுடியாது. எதிரிகளின் தாக்குதல் எத்தன்மைத்தாயிருக்கும் என்றும் நிச்சயிக்க முடியாது. வெறிபிடித்த இட்லர் முஸோலினியின் பக்கந்தான் வெற்றி மழை பொழிகிறது என்ற செய்திகள் நிமிஷத்துக்கு நிமிஷம் காதிலே விழுந்து கொண்டிருக்கின்றன. கடலிலே சென்றால் கண்ணிவைத்துப் பிடிக்கின்றனர்—பறந்தால் சுட்டு வீழ்த்துகின்றனர் — நடந்தால் சுற்றிலும் நாசம் படையெடுத்து வருகிறது-இப்படிப்பட்ட சூழ்நிலை. கூடாரத்தைவிட்டு வெளியிலே சென்றால் தலையிலே செடி கொடிகளை வைத்துக் கட்டிக்கொண்டு நடக்கவேண்டும்—இல்லை; இல்லை;நகர வேண்டும். அப்போதுதான் எதிரியின் விமானத்தை ஏமாற்றமுடியும். ஏதோ மரஞ் செடி கொடி அசைகிறது என்று பகைவர்கள் போய்விடுவார்கள். மனிதன்; அதுவும் ராணுவத் தொப்பி அணிந்த நேசதேசப் படையைச் சேர்ந்தவன் என்று தெரிந்தால் போதும்; விமானத்திலிருந்து குண்டு பொழியும். சிதறிப் போய்விட வேண்டும் தூள் தூளாக! இதுபோன்ற பயங்கரம் நிறைந்த—விநாடிக்கு விநாடி மரணத்தோடு



போராட்டம் நடத்திய-அந்த சமயத்திலேகூட, நான் அவளுக்குக் கடிதம் எழுதத் தவறவில்லை. பட்டாள முகாமிலே பயிற்சி பெற்ற நேரம் போக, மிச்சமுள்ள நேரமெல்லாம் என் காதலிக்கு ஓலை எழுதுவதிலேயே உற்சாகமாகக் கழிந்தது. அன்று கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன். என் நண்பன் பாலன் அதைப் பின்னாலிருந்து கவனித்துக் கொண்டிருந்ததைக்கூட நான் பார்க்கவில்லை. பாலன் தமிழ்நாட்டிலே தஞ்சை ஜில்லாவிலிருந்து பட்டாளத்திற்கு வந்தவன். என்னோடு நெருங்கிப் பழகிய நண்பன். சொல்லப் போனால், எனக்குத் தமிழ் கற்றுக் கொடுத்த ஆசிரியர்கூட அவன்தான். என்னிடம் அவன் இந்தி கற்றுக் கொண்டான். ஒருவருக்கொருவர் உபாத்தியாயர்களாக மட்டுமில்லாமல் உழுவலன்பூண்ட தோழர்களாகவும் இருந்தோம். கடிதத்தை எழுதி தபாலில் போட்டு விட்டு வந்தேன். பாலன் என்னைப் பரிகாசமாகப் பார்த்தான். 'என்ன பாலா?' என்றேன். பாலன் ஆரம்பித்து விட்டான்.




"அன்புள்ள கண்மணி சுதேஷுக்கு சுந்தர்பாபுவின் ஆசை முத்தங்கள். அல்லும் பகலும் அனவரதமும் உன் அழகு முகத்தை எண்ணி யெண்ணி, ஏங்கிக் கொண்டிருக்கிறேன். எதிரி விமானங்கள் வட்டமிடும் போதும், எங்கள் பாசறையை நோக்கி ஆபத்து வருகிறது என்று அபாயச் சங்கு ஒலிக்கிற போதும்—இடியோசை கேட்டு "அர்ச்சுனா-அர்ச்சுனா" என்று அலறுவார்களே; அது போல நானும் பகையோசை கேட்டு, "சுதேஷ்—சுதேஷ்" என்று முணு முணுக்கிறேன். அந்தக் காதல் மந்திரந்தான் கண்ணே—எனக்கு ஆறுதல் வழங்கும் அமுதமாக இருக்கிறது — எப்போது இந்தப் பொல்லாத போர் முடியுமோ; பொன்னழகே; உன்னை ஓடி வந்து அணைப்பேனோ; தெரியவில்லை. சுதேஷ்! தினந்தோறும் உனக்கு நான் கடிதம் எழுதுகிறேன்; நீ பதிலுக்கு ஏன் நாள்தோறும் கடிதம் எழுதக் கூடாது? தெவிட்டி விடும் என்று கருதுகிறாயோ? என் தேனே! முன்பெலாம் தினம் ஒரு மடல் எழுதினாய்; 'தினம் தினம் கடிதம் எழுதுங்கள்' என்று எனக்கு மட்டும் கட்டளையிட்டாய். உன் கட்டளையை சிரமேற் கொண்டு நான் எழுதிக் கொண்டிருக்கிறேன். நீ மட்டும் ஏனோ; திடீரென்று ஒரு மாத காலமாக மௌனம் சாதித்து விட்டாயோ; தெரியவில்லையே—சுதேஷ்—சுருண்டு போகிறேன் நான்! கனவிலே உன்னைக் கண்டு கலங்குகிறேன். சதா என் இருதய பீடத்திலே அமர்ந்து என் பூசைக்குரிய பொன் விக்ரமாக அமைந்திருக்கும் உனக்கு என்மீது என்னம்மா கோபம்? என் உயிரே! இதற்காவது பதில் எழுதி எனக்கு உயிர்ப் பிச்சை கொடு! விரைவிலே திரும்பி வந்து விவாகம் செய்து கொள்ளவில்லை என்ற ஒரு தவறைத் தவிர நான் வேறென்ன தவறு செய்தேன்? விரைவில் வெற்றி வீரனாக வருகிறேன்! பதில்—பதில்—பதில்.

அன்புக்கு அடிமை
சுந்தர்பாபு

நான் அவளுக்கு எழு[...] கடிதத்தை அப்படியே ம[...] பாடம் செய்து ஒப்புவித்தா[...] பாலன். அப்போதுதான் தெ[...] தது அவன் என் பின்னா[...] மறைந்திருந்து கடிதம் மு[...] வதையும் படித்திருக்கிற[...] என்று!

காதல் விவகாரங்களில் [...] படும் போதாகட்டும்; காத[...] கடிதம் எழுதும் போதாக[...] டும்; காதலியின்பால் கண்[...] வீசும்போதாகட்டும் — பக்[...] தில் யார் இருந்து நம்மை [...] னிக்கிறார்களோ என்ற பய[...] மனிதனுக்கு ஏற்படுவது கி[...] யாதே! சும்மாவா சொன்னார்க[...] காதலுக்கு கண்ணில்லை என்[...] அது என் விஷயத்தில் உ[...] மையாகத்தான் முடிந்து வி[...] டது—என்னையறியாமல், [...] லன் கடிதத்தைப் படித்த[...] மட்டுமல்ல நான் குறிப்[...] வது; என் காதல் மாளிகை[...] அஸ்திவாரமே—குருட்[...] கொத்தனாரால் அமைக்க[...] பட்ட போலி அஸ்திவாரமாக[...] தான் முடிந்து விட்டது—அ[...] போதே சொன்னான் பால[...] அடிக்கடி கடிதம் எழுதா[...] கசந்து விடும் என்று! [...] வலிக்க வலிக்க எழுதினே[...] கருத்து இனிக்கப் படிப்பா[...] என்று நம்பினேன்—ஆனா[...] நம்பிக்கை நாசமாயிற்று. உ[...] கத்தை நிலை கலக்கிய போ[...] முடிந்து விட்டது—ஆனா[...] என் உள்ளத்தை நிலை கலக்கி[...] போர் முடிவடையவில்லை.

ஆயிரம் மடல்கள்; அதற்[...] அவள் பதில் எழுதவில்[...] பாலன் சொன்ன சமாதான[...] கள் எதுவும் என் காதிலே [...] வில்லை. "யுத்தச் செய்திக[...] யாருக்கப்பா சரியாகக் கிடை[...] கிறது? எங்கேயோ ஒரு மூ[...] யில் இந்தியாவிலே குடியிரு[...] கும் உன் காதலியின் குடும்ப[...] தார் யுத்த வெறியினால் எ[...] படிப் பாதிக்கப்பட்டார்களோ[...] யார் கண்டது? சுதேஷாவி[...] மீது வீணாக ஆத்திரப்படா[...] நேரில் சென்று உண்மை நி[...] யை அறியலாம்" என்[...] பாலன் அடிக்கடி கூறினா[...] அவனது ஆறுதலால் உயி[...] வாழ்ந்தேன். அவன் கூறிய[...]

○ தொடர்ச்சி 10-ம் பக்[...]



அடுத்த வாரம்

இந்தப் பக்கத்தில்

புதையல்

Filmed as bound

# புதிய பொதுக்குழு காட்சிகள்



அண்ணா, சம்பத் முதலியோர் பொதுக் குழுவிற்கு வருகிறார்கள்.



மதியழகன், பொதுக் குழு உறுப்பினர் விபரத்தை பரபரப்புடன் சேகரிக்கிறார்.



வந்திருந்தவர் பட்டியலை அண்ணா படிக்கிறார்.



தி. மு. கழகத்தின் இருதயம்-புதிய பொதுக் குழுவின் தோற்றம்.



மாநில மாநாட்டு நிதி பற்றி சம்பத் பேசுகிறார்.



தீர்மானத்தின் மீது அண்ணா ஓட்டளிக்கிறார்.



தம்பிமார்களிடையே புன்னகையைக் கிளப்பும் பொன்மொழி சிந்துகிறார்: அறிஞர் அண்ணா.





# கடல் கடந்தோர் கடிதம்

## சிங்கப்பூர்

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

சென்ற வாரம் இங்கிருந்து சென்னை செல்லும் கப்பலுக்கு 'டிக்கட்' கொடுக்கும் இடத்திற்குச் சென்றிருந்தேன். சிங்கப்பூர் உலகத்தில் உள்ள அழகிய பெரிய நகரங்களில் ஒன்று என்பதுதான் உங்களுக்குப் புரியுமே! இந்த, அழகிய பெரிய நகரத்தில், கப்பலுக்கு டிக்கட் கொடுக்குமிடத்தில் கூடியிருந்த தமிழர் கூட்டத்தைக் கண்டவுடன், தமிழகத்தில் மதுவிலக்குச் சட்டம் வருவதற்கு முன்பு, கள்ளுக் கடைகளின் முன்பு கூடியிருக்கும் கூட்டத்தைத்தான் ஞாபகப் படுத்துவதாக இருந்தது. அங்கு, டிக்கட் எடுக்கக் கூடியிருந்த கூட்டத்தையும்–டிக்கட்டுக்காக ஆண் பெண் அனைவரும் மோதியடித்துக் கொண்டிருந்த காட்சியையும் அப்படியே படம் எடுத்து அனுப்பியிருக்கிறேன். படத்தைப் பார்த்தால் சென்னை-நாகை வருவதற்கு இங்குள்ள தமிழர்களுக்கு டிக்கட் எடுக்க ஏற்படும் கஷ்டம் சுலபமாக விளங்கிவிடும்.

இங்கிருந்து தமிழர்கள் தாயகம் புறப்பட்டுவர, கப்பல் டிக்கட் எடுப்பது பல ஆண்டுகளாக மிகவும் சிக்கலானதாகவும் — சிரமமானதாகவும் இருந்துகொண்டே வருகிறது. இதைப் பற்றிப் பத்திரிகையில் பத்திபத்தியாக எழுதியுங்கூட, எந்தவித பலனும் இதுவரை ஏற்படவில்லை. சென்னைக்கு புறப்படும் குறிப்பிட்ட கப்பலுக்கு டிக்கட்டுகள், குறிப்பிட்ட ஒரே நாளில்கொடுக்கப்படுவதால், தாயகம் புறப்பட ஏற்பாடுகள் செய்து, பிரயாணத்திற்கு வேண்டிய பர்மிட்டுகள் எல்லாம் பெற்றுக்கொண்டு, தாங்கள் வேலை பார்த்துவரும் அலுவலகத்தில் ஊர் செல்வதற்காக விடுமுறையும் பெற்றுக்கொண்டு, டிக்கட் மட்டும் எடுக்கவேண்டும் என்ற நிலையில் இருப்பதால், எப்படியும் ஒவ்வொருவரும் டிக்கட் எடுத்துவிடவே முயற்சிக்கின்றார்கள். குறிப்பிட்ட கப்பலுக்கு டிக்கட் எடுக்கத் தவறினால் தங்களுடைய லீவு நாட்கள் குறைவதோடு, அடுத்தக் கப்பல் புறப்படும்வரை தங்க வேண்டி நேரிடுவதால் வேண்டாத வீண் செலவுகளும் ஏற்படுகின்றன. இவைகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டுமென்றால், டிக்கட் கொடுக்கும் முறை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

சிங்கப்பூரில், தமிழர்களுக்கு மட்டும்தான் கப்பலுக்கு டிக்கட் எடுக்க இவ்வளவு சிக்கலும்—துன்பமும் ஏற்படுகிறதா; அன்றி இங்குள்ளமற்றசீனர்கள்-மலாய்க்காரர்கள்-ஆங்கிலேயர்கள் அனைவருக்கும் இந்தத் தொல்லைகள் இருந்து வருகின்றனவா என்று நீ அறிய ஆசைப்படலாம். ஆனால், இந்தக் கஷ்டமானது குறிப்பாக தமிழர்களுக்கு மட்டும்தான் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சிங்கப்பூரில் உள்ள மற்ற சமூக மக்கள் வெளி நாடுகளுக்கு சென்று கொண்டுதானிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் டிக்கட்டுகள் எந்தவித சிரமும் சிக்கலும் இல்லாமல் கிடைக்கும்போது தமிழர்களுக்கு மட்டும் இந்த சிக்கலும்-சிரமும் ஏற்படுவானேன்?

அதுமட்டுமல்ல; கப்பலுக்கு டிக்கட் எடுக்குமிடத்தில், தடவைக்கு சுமார் ஆயிரம் பேர்கள் கூடுகின்ற இடத்தில், டிக்கட் எடுக்கவரும் பிரயாணிகள் தங்குவதற்கும், சௌகர்யமாக இருந்து டிக்கட் எடுப்பதற்கும் வசதி செய்து தரப்பட வேண்டாமா? ஒரே நாளில் தங்களுடைய பணப் பெட்டியை சுலபமாக நிரப்பிவிட வேண்டும் என்று நினைத்து, குறிப்பிட்ட கப்பலுக்கு டிக்கட்டை ஒரே நாளில் விற்கும் கம்பெனி நிர்வாகத்தால் தமிழருக்கு மட்டும் எந்தவித வசதியும் செய்துத் தரப்படாதது, எதனால்? சென்னை செல்லும் கப்பல்களுக்கு டிக்கட் எடுக்குமிடத்தில் பிரயாணிகள் வெயிலிலும்—மழையிலும் நின்று கொண்டுதான் டிக்கட் எடுக்க வேண்டியிருக்கிறது. அதுவும், ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் நேரத்திற்குள் டிக்கட் கொடுக்கும் சடங்குகள் முடிந்துவிடுவதாக இருந்தால்கூட பாதகமில்லையே. காலையிலிருந்து மாலைவரை அல்லவா டிக்கட்டுக்காக வரிசை பிடித்துக் கொண்டு நிற்க வேண்டியிருக்கிறது. இதற்கிடையில் கொடுமையான வெயிலையும், கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் கால்கடுக்க வரிசையில் நின்றால்தான் டிக்கட் எடுக்க முடியும்.

காலையிலிருந்து மாலை வரை டிக்கட்டுக்காக வரிசைபிடித்து நிற்கும் அத்தனை பேருக்கும் டிக்கட் கிடைக்கின்றதா? அதுதான் இல்லை, டிக்கட் கிடைக்காமல் திரும்புபவர்கள் எத்தனையோ பேர். இந்த லட்சணத்தில் சிங்கப்பூருக்கும்-சென்னைக்கும் கப்பல் கம்பெனி நடத்துபவர் ஒரு இந்திய லட்சாதிபதி.

மக்கள் கொடுக்கும் பணத்திலிருந்து வாழ்க்கை நடத்தும் ஒரு சாதாரண கம்பெனி நமக்குச் செய்துதர வேண்டிய வசதியைக் கூட செய்துதரவில்லை என்றால் என்ன அர்த்தம்? இதைப்பற்றி பத்திரிகையில் பலமுறை எழுதியுங்கூட எந்தவித பலனும் ஏற்படவில்லை என்றால் என்ன பொருள் இதுபற்றி எவ்வளவுதான் கரடியாகக் கத்தியும் காரியம் கைகூடவில்லை என்றால் காரணம் தான் என்ன? நம்மைப்பற்றி, அதாவது தமிழர்களுக்கு இந்த நாட்டில் உள்ள ஒரு சாதாரண கம்பெனி, அதுவும் இந்தியரால் நடத்தப்படும் கம்பெனி எந்த அளவுக்கு மதிப்புத் தருகிறது-மதிப்பு வைத்திருக்கிறது என்பது தானே பொருள்?

இங்கு, தமிழர்களின் உரிமைக்காக போராட எந்த ஒரு ஸ்தாபனமும் இல்லை என்கின்றபோது, தமிழர்களுக்கு ஏற்படும் குறைகளை எப்படி நிவர்த்தி செய்து கொள்ள இயலும்? இங்கு, ஜாதியின் பெயராலும்-மதத்தின் பெயராலும்-கிராமத்தின் பெயராலும்—மாவட்டத்தின் பெயராலும் நூற்றுக் கணக்கான சங்கங்கள் வைத்துக் கொண்டு தமிழர்களிடையே பிளவையும் — வேற்றுமையையும் வளர்த்துக் கொண்டிருக்கும் தமிழர்கள், தங்களுக்கு ஏற்படும் பொதுவான குறையை போக்கிக் கொள்ள எப்படி ஒன்றுசேர முடியும்?

இங்குள்ள திராவிடர்கள்தான் இந்த நிலையில் இருக்கிறார்கள் என்றால், இங்குள்ள இந்தியர்களின் நலனை கவனிக்க இருக்கும் இந்திய அரசாங்கப் பிரதிநிதியும் இதைப் பற்றி கவனிப்பதாகவோ கவலைப்படுவதாகவோ தெரியவில்லை. இந்தக் குறைகளை எல்லாம் போக்க வேண்டியது தங்களுடைய கடமை அல்ல என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ! வேறு எதுவாக இருக்க முடியும்?

மலாயாவில் உள்ள இந்தியர்களில் 100-க்கு 80பேருக்குமேல் தமிழர்களாக இருந்தும், இந்திய அரசாங்கம் இந்தியர்கள் என்ற போர்வையில் தமிழ் மொழி தெரியாதவர்களைத்தானே அரசாங்கப் பிரதிநிதியாக அனுப்பிவருகிறது!

இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக சிங்கப்பூருக்கு ஒரு தமிழரை அனுப்பினால், இந்திய அரசாங்கத்திற்கு என்ன நஷ்டம் ஏற்பட்டுவிடும்? அல்லது, இந்திய பிரதிநிதியாக வருவதற்கு தமிழகத்தில் தகுதியானதமிழர் ஒருவர், இந்திய அரசாங்கத்தின் கண்களுக்குப் படவில்லையா? இங்குள்ள பெரும்பான்மையான மக்களாகிய தமிழர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்மையாகவே இருக்குமானால், மலாயா பல்கலை கழகத்தில் ஆரம்பிக்க இருக்கும் தமிழ்ப் பகுதிக்கு இந்திய அரசாங்கம் சமஸ்கிருத புத்தகங்களை அனுப்பி வைக்குமா? இங்கு, இந்தியர்கள் என்ற போர்வையில் தமிழர்கள் பல துறைகளிலேயும் அடக்கப் படுகிறார்கள்; ஒதுக்கப்படுகிறார்கள்; இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும். இங்குள்ள தமிழர்கள் தங்களுக்கென தனித்த ஒரு பலம் வாய்ந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொள்ளாதவரையில், தமிழரின் நிலை தாழ்ந்த நிலையிலேதான் இருந்துவரும் என்பது உறுதி.

17-4-55 அன்புள்ள,
சிங்கப்பூர் கனகன்



"நாடு துறந்தோம்; வேற்று நாடு சிறக்க பாடுபட்டோம்; சொந்த வீடு திரும்பிடவோ; அப்பப்பா!... எத்தனை இன்னல்கள்; தொல்லைகள்!" என்று கேட்கிறதோ காத்திருக்கும் இக்கூட்டம்...?



தோழர் இளம்பரிதி
(சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர்)


தமிழர் அனைவரிடமும் தவழப் போகும் அழகு இதழ் !

★ மலாயாவில் பெரியார் ★

தன்மான இயக்கத் தந்தை பெரியார் ராமசாமிக்கு மலாயாத் தமிழ் மக்கள் திரண்டெழுந்து தந்த வரவேற்பு விவரங்கள்; நிகழ்ச்சிப் புகைப்படங்கள்;பெரியாரின் கருத்துரைகள்; மற்றும் பிரத்யேக அம்சங்கள் நிறைந்த மலர்! மலாயா தமிழரின் இதயத்தை எடுத்துக் காட்டும் அளவு கோல் இம்மலர் !

தனிப்பிரதி விலை எட்டு அணா

ஒன்றிரண்டு பிரதிகள் வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு 8அணா வீதம் போஸ்டல் ஆர்டர் அனுப்பவும். வியாபாரிகளுக்கு 20 சதவிகிதம் கழிவு உண்டு.

கே. பிச்சையன்,
199, அப்பர் சிராங்கூன் ரோடு.
சிங்கப்பூர்-13.

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

"கர்வம் தரும் கேடுகளைப் பற்றி ஒரு கதை சொல்ல வேண்டும்" என்று ஒரு தம்பி இரண்டு முறை கடிதம் எழுதி விட்டான்.

கர்வம் என்பது பொல்லாதது; வேண்டாதது; இருந்தாலும் அது புத்தி புகட்டும் ஒரு ஆசிரியரைப் போல. ஆமாம்; பள்ளிக் கூடத்து ஆசிரியர் அடித்து அறிவு சொல்வார்; வீட்டு ஆசிரியர்களான பெற்றோர்கள் அன்பால் புத்தி புகட்டுவார்கள்; ஆனால், 'கர்வம்' என்ற ஆசிரியரோ, இன்னல்களைக் கொடுத்து, தொல்லைகளைத் தந்து, நல்ல புத்தியைப் புகட்டி விடும்.

கர்வத்தால் — தலைக்கனத்தால் தரை மட்டமானவர்களின் கதைகள் ஏராளமாக இருக்கின்றன. அந்தக் கதைகள் எல்லாம் மற்றவர்களுக்கு அறிவு புகட்டும் நல்ல நூல்கள்; அவைகளைப் படிக்கும் போது, "கர்வமா? அப்பப்பா! பொல்லாத நோயல்லவா அது?" என அஞ்சத் தோன்றுமல்லவா?

அப்படி கர்வத்தால் கெட்டு, பின், புத்தி பெற்ற தம்பி ஒருவனின் கதை இவ்வாரம் வருகிறது; படியுங்கள்:

— சொர்ணம்

# பிறை வானம்



...பிள்ளைகள் பகுதி...

## அழகுப் போட்டி

[ ஆரூர்-அமிர்தம் ]

அன்று ஆரூர் பள்ளிக்கூடத்தை வெகு அழகாக அலங்கரித்துக் கொண்டிருந்தனர், பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும், மற்றவர்களும். ஆம்; அன்று தான் அந்த ஆண்டின் பள்ளி இறுதி நாள் விழா. அன்று அந்தப் பள்ளியிலே பலவித பரிசுப் போட்டிகள், நாடகங்கள் முதலியன நடைபெற இருந்தன.

வேடிக்கை விளையாட்டு என்றால் முன் வரிசை—படிப்பு என்றாலோ கசப்பு; வெறுப்பு-இப்படிப் பழகி விட்ட இந்திரஜித்துக்கு, கேட்க வேண்டுமா? ஒரே கொண்டாட்டம்; குதூகலம்; கும்மாளம்! போட்டிகளில் கலந்து கொள்ள முதல் வரிசையில் நின்றான். அழகுப் போட்டியில் கலந்து கொண்டான். இயற்கையில் அவன் கொண்டிருந்த அழகு—செயற்கையாக அவன் செய்து கொண்ட டாம்பீகப் — இவைகள் அவன் எதிர்பார்த்தது போலவே, முடிவில் வெற்றியையும் தந்து விட்டது.

அன்றுமுதல் இந்திரஜித் தன் குணத்திற்கு எதிர்ப்பதமாகி விட்டான். இந்திரஜித்தைவிட அழகிலே ஒருவன் குறைவாக காணப்பட்டால், அவன் இந்திரஜித்தின் பரிகாசத்திற்கு ஆளாகித்தான் இருப்பான். இந்திரஜித்தினுடைய 'பரிசாகப் பெயர்' இல்லாமல் அந்தப் பள்ளியிலே ஒரு பையனுமே கிடையாது. அவன் ஒவ்வொருநாளும் தன்னை ஒவ்வொரு விதமாக அலங்கரித்துக் கொண்டு பள்ளி செல்ல ஆரம்பித்தான். அழகுக்கு அழகு செய்தால் எவ்வாறு இருக்குமோ அப்படித் தோன்றினான் அவன். பள்ளியிலே உள்ள ஒவ்வொரு மாணவருடைய கண்களும் ஒவ்வொரு நாளும் இந்திரஜித்தை பார்த்து, விடும் பெருமூச்சு இந்திரஜித்தை அதிகம் கர்வம் கொள்ளச் செய்தது.

இப்படியாக ஓடிக் கொண்டிருந்தன நாட்கள். அதோடு இந்திரஜித்தின் கர்வமும் ஓங்கிக் கொண்டிருந்தது. எந்தத் தவறான பாதையில் செல்லும் மனிதனுக்கும் வாழ்க்கையில் ஒரு முடிவு காலம் வரத்தானே செய்யும் என்பதை இந்திரஜித் அறியவில்லை போலும்!

✱

இப்படியாக முன்னூற்று அறுபத்தைந்து நாட்கள் ஓடியே போய்விட்டன.

மறு ஆண்டின் பள்ளியின் இறுதி நாள் வெகு வேகமாக வந்து விட்டது. இறுதி நாளன்று பள்ளி வழக்கம் போல் குதூகலமாகக் காணப்பட்டது. அன்று இந்திரஜித் தன்னை பள பளக்கும் ஆடைகள், கையிலே கடிகாரம், முதலியவைகள் அணிந்து அழகாக அலங்கரித்துக் கொண்டான். பள்ளியை நோக்கி நடந்தான். அன்று தனக்கு கிடைக்கப் போகும் பரிசைப்பற்றி எண்ணியபடியே உல்லாசத்தில் மிதந்து கொண்டிருக்கையில், எதிரிலே கிடந்த கல் ஒன்று அவனை பதம் பார்த்து விட்டது. ஆம்; அவன் அந்த கல் தடுக்கி கீழே விழுந்தான். அவன் முகம் எல்லாம் காயங்கள் ஏற்பட்டு, இரத்தக் கறைகளோடு காணப்பட்டது.

அந்தோ! எந்த அழகு அவனை கர்வம் அடையச் செய்ததோ, அந்த அழகை அவன் நினைக்கக் கூடமுடியாத அளவிற்கு அவன் பரிதாபத்திற்கு உரியவனானான். அவன் அந்தக் காயங்களோடு தன் பள்ளி சென்று பள்ளி மாணவர்களின் பரிகாசத்துக்கு ஆளாகக்கூடாது என எண்ணி தன் வீட்டை நோக்கி நடைபோட ஆரம்பித்தான், பெரியதொரு ஏமாற்றத்தோடு. அன்று பள்ளியிலே மற்றொரு பையனுக்குப் பரிசு வழங்கப் பட்டு விட்டது, அழகுப் போட்டியில் வெற்றிபெற்றதற்காக.

✱

## கோபம் எங்கே!

பூனைபோல நடந்து வந்தான் இளங்கோ. தினசரிப் பேப்பருக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்த அப்பாவுக்கு அவன் வந்து நின்றது தெரியவேயில்லை.

"அப்போவ்...?என்று இழுத்தான் இளங்கோ.

'என்னடா...... தொல்லையை ஆரம்பிச்சுட்டியோ?" என்று கோபத்துடன் கேட்டுக் கொண்டே முகத்தைத் திருப்பினார் அப்பா! அவருக்கு தன் செல்ல மகன் சினிமாவுக்கு சில்லறை கேட்க ராகம் போடுகிறானே என்ற பயம்!

ஆனால் இளங்கோ அப்பாவை அழைத்த காரணமேவேறு; "ஏம்பா...ஒரு கேள்வி...' என்றான்.

"கேளு...கேளு... கிரிக்கெட் 'ஸ்கோர்' என்னன்னு கேட்டுடாதே! நான் ஒன்னும் விளையாட்டுச் செய்தி படிக்கவில்லை"

"அதில்லேப்பா! ஒருபையன் பரிட்சையிலே தமிழில் நூற்றுக்கு எட்டு மார்க்கும், கணக்கிலே ஐந்தும் வாங்கியிருந்தா என்னப்பா செய்வீங்க...?"

"என்ன செய்வேனு?...அந்த முழு முட்டாளை-மண்டுகத்தை-உதை உதை என்று உதைத்து, முதுகுத் தோலை உரித்துவிட்டு மறுகாரியம் பார்ப்பேன்..."—உண்மையிலேயே அப்பாவுக்குப் பொல்லாத கோபம்!

"ஐயைய்யோ! அப்படின்னு நம்ப தாத்தா உங்க முதுகுத் தோலை உறிச்சுட்டாரா?" என்று இளங்கோ கேட்டு விட்டான்.

அப்பாவுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன?" என்று கேட்டுக் கொண்டே நாற்காலியை விட்டே எழுந்துவிட்டார்.

"என்னவா? இதோ பாருங்கள்!" என்று சிரித்துக் கொண்டே தன்கையில் மறைத்திருந்த காகிதம் ஒன்றை நீட்டினான் இளங்கோ! அப்பா சப்தம் போடாமல் கீழே உட்கார்ந்தார். மீண்டும பேப்பருக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டார். புரிகிறதா? இளங்கோ அப்பாவிடம் காட்டியது, பல ஆண்டுகளுக்கு முன் அவர் பள்ளியில படிக்கும்போது பெற்ற மார்க்குகளின் பட்டியல்—'பிராகரஸ் ரிப்போர்ட்'!

—கல்யாணம், மதுரை.

## சிறிய வயதில்

### பசியால் துடித்தான்... பிச்சை எடுத்தான்... பாவம், கைதியாகவும் மாறிவிட்டான்!

எலும்பும் தோலுமான உடல்—குழி விழுந்த விழிகள்—பரட்டைத் தலை—பரிதாபகரமான தோற்றம்—இப்படி ஒரு பையன்! தள்ளாடுகிறான்; தடுமாறுகிறான்; மெல்ல மெல்ல நடக்கிறான். பாவம், சாப்பிட்டு எத்தனை நாளாகிறதோ!

கொஞ்ச தூரம் சென்றதும் அந்தப் பையன் நின்றான். எதிரே ஒரு கடையிருந்தது. அதை நெருங்கினான். கையேந்தினான். வெளிறிப்போன உதடுகளைத் திறந்தான். பேச முடியாமல் பேசினான். "ஐயா! சாப்பிட்டு இரண்டு நாட்களாகின்றன......ஏதாவது கொடுங்கள்! என் உயிரைக் காப்பாற்றுங்கள்" என்றான்; கெஞ்சினான்.

அவன் கேட்டது கிடைக்கவில்லை. ஆனால், சற்றும் எதிர்பாராத வேறு ஒன்று கிடைத்தது. அவன் முதுகில் 'படா' ரென்று ஒரு அடி விழுந்தது. பையன் திடுக்கிட்டான்; திகைத்தான்; திரும்பிப் பார்த்தான். அங்கே... ஒரு முரட்டுப் போலீஸ்காரன் நின்றுகொண்டிருந்தான். அவனது கோவைப் பழக் கண்கள் உருண்டன. இரும்புக் கைகள் பையனைப் பிடித்தன. பரபரவென்று இழுத்தன. பக்கத்தில் நின்ற போலீஸ் லாரியில் தள்ளின. வண்டி பறந்துவிட்டது. அவன் செய்த குற்றந்தான் என்ன?

மறுநாள் காலை நீதி மன்றத்தின் முன் பையன் நின்றான். பிச்சை எடுத்ததாக அவன்மேல் குற்றம்! பையன் தனது பட்டினிக் கதையைச் சொன்னான். பலனில்லை! அவனுக்கு தண்டனை—ஒரு மாதக் கடுங்காவல் தண்டனை விதித்துவிட்டார்கள். பையன் கலங்கிய கண்களுடன் சிறை சென்றான்.

இதுமட்டுமல்ல; பசியிலும் பஞ்சத்திலும் சிக்கிய அந்தத் தம்பி, இவைபோல இன்னும் எவ்வளவோ தொல்லைகளை ஏற்றான். ஆனால் எதிர்காலத்தில் இந்தத் தொல்லைகளைப் பற்றி ஆயிரம் ஆயிரமாகக் கதைகள் எழுதினான். லட்சம் லட்சமாகப் பொருள் சேர்த்தான். அந்த விசித்திர எழுத்தாளன் யார் தெரியுமா? அவன்தான் அமெரிக்காவின் தலைச்சிறந்த நூலாசிரியர்களில் ஒருவரான ஜேக் லண்டன்!

## பெரிய மனிதர்கள்

காதல்......

★ 6-ம் பக்கத் தொடர்ச்சி

உண்மைதான் என்பதுபோல அவளுக்கு நான் கடைசியாக எழுதிய கடிதங்கள் எல்லாம் எனக்கே திரும்பி வர ஆரம்பித்தன. யுத்தத்திஞல் என் அன்புக்சரசியும், அவளது குடும்பத்தினரும் பாதிக்கப்பட்டு விட்டனர் என்பதை நம்பினேன். சுதேஷாவின் அன்பையும் காதலையும் சாதாரணமாக எடை போட்டு விட்டோமே என்று எனக்குள்ளாகவே வருந்தினேன். போர் முடிந்தது; எங்களையெல்லாம் மகிழ்ச்சியோடு ஊருக்கு அனுப்பினர்கள். நண்பன் பாலனையும் அழைத்துக் கொண்டு, சுதேஷாவைப் பற்றிய விபரமறியப் புறப்பட்டேன். சுதேஷாவின் வீடு பூட்டப்பட்டுக் கிடந்தது. பக்கத்திலே விசாரித்தேன். அவர்கள் சொன்னர்கள் — அவளுக்குக் கல்யாணமாகி விட்டதென்று!

என் மனம் சூன்யமாகி விட்டது—மயக்கம் வரும் போலிருந்தது அவ்வளவுதான்; கீழே சாய்ந்து விட்டேன்—மயக்கம் தெளிந்து எழுந்தேன்—பக்கத்திலே பாலன் இருந்தான்—அவனைக் கேட்டேன்:

" சுதேஷாவின் கணவன் யார் என்று யாரிடமாவது விசாரித்தாயா?" என்று!

" விசாரித்து விபரமறிந்தேன்—சுந்தர்! சுதேஷாவுக்கு கணவனை தேடிக் கொடுத்ததே நீ தானே!" என்றான் பாலன்.

" நானு? "

நீ இல்லை—நீ எழுதிய கடிதங்கள் !"

" கடிதங்களா...? "

" ஆமாம்—தினம் ஒரு கடிதம் எழுதும்படி சுதேஷா உனக்கு எழுதினுள் அல்லவா...?"

" ஆமாம் "

" அது ஏன் தெரியுமா? "

" ஏன்? "

" கடிதம் கொண்டு வருகிற அந்தத் தபால்காரனின் அழகை ரசிக்கத்தான் ! "

" என்ன? "

" ஆமாம்—சுந்தர்! அக்கம் பக்கத்தார் கூறிய உண்மை இது! தினந்தோறும் அந்த அழகும் வாலிபமும் இணைந்த தபால்காரனை சந்தித்த சுதேஷா, தன்னிலை மறந்தாள்—நீ அடிக்கடி கூறுவாயே இந்துப் பெண்ணின் தர்ம நெறியைப் பற்றி; அந்த நெறியிலிருந்தும் விழுந்தாள். அவ்வளவுதான்; தபால்காரனுக்கும் சுதேஷாவுக்கும் கல்யாணம் முடிந்துவிட்டது ! "

பாலன் இந்தச் செய்தியைக் கூறிய பிறகு. உலகப் போர் இன்னும் முடியவில்லை என்றே எனக்குத் தோன்றியது—தோன்றுகிறது. பாலன் என்

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

## வெட்கம்! வெட்கம்!!

"பல ஊர்களில் இவ்வருஷம் மிக உற்சாகமாக ஸ்ரீராம நவமி கொண்டாடுவதற்காக ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ...வடை பருப்பு பானகமும் பிரசாதமாக வாங்கி அனைவரும் ஆனந்தமாய் அன்று அனுபவிக்க வேண்டும்."

இப்படி ஏப்ரல் 3-ம் தேதிய 'கல்கி' இதழின் 9-வது பக்கத்தில் ஆச்சாரியார், பத்தகோடிகள் ராமபிரானை மறந்துவிடாதிருக்க ஒரு 'வேண்டுகோள்' விடுத்திருக்கிறார்.




மேலே குறிப்பிட்ட 'வேண்டுகோள்' வெளிவந்த அதே கல்கி இதழின், 74-வது பக்கத்தில் வெளிவந்திருக்கிறது இந்தப் படம்.

சிரம் குனிந்து கரம் கூப்பி ஆண்டவனின் கதைகேட்கவேண்டிய பக்தகோடிகள், சுண்டலுக்காகவும், பொங்கலுக்காகவும் மட்டுமே ஓடிவரும் நிலையல்லவா இன்று அரும்பியிருக்கிறது! வெட்கம்! வெட்கம்!!

[தலையங்கம் தொடர்ச்சி]

அவர், தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளராக பணிபுரியும் அன்புக் கட்டளைக்கு ஆட்பட்டிருக்கிறார்.

புதிய பொதுச் செயலாளரை, புன்னகை தவழும் முகத்தோடு— "புனிதக் கொள்கை பரப்பும் புரட்சிக் கழகத்தைக் கட்டிக் காப்போம் வாரீர்" என்று கரம் நீட்டி வரவேற்கிறோம் நாம் — வாழ்த்துகிறோம் அவரை!

செயலாளரைத் தேர்ந்தெடுத்து, ஜனநாயக முரசொலிக்கும் நமக்கு—எதிரே மலைபோல் குவிந்திருக்கும் பொறுப்புகள் தெரியாமலில்லை! அண்மையிலே மாநில மாநாடு வரப்போகிறது. அதற்கென மாவட்டங்கள் முன் செலவுக்கான நிதி திரட்டுவதிலே தீவிரமாக ஈடுபட்டுத் தீரவேண்டும். சென்ற மாநில மாநாட்டிலே முப்பதாயிர ரூபாய் மிச்சப்படுத்தினோம் — கழக மாளிகை கண்டோம். இந்த மாநாட்டிலே கழகத்திற்கு நிறையப் பணம் தேவைப் படுகிறது. **மாநாடு வெற்றிகரமாக நடைபெறவேண்டும். 'நம் நாடு' நாளிதழை இன்னும் பெரிய அளவிலே கொண்டுவருவதற்கு நிறையப் பணம் வேண்டும். கழகத்திற்கு இன்னும் எத்தனையோ வசதிகள் தேவை. நமது பிரச்சாரம் முன்னிலும் வேகமாக, விரிவாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மாவட்டங்கள், கிளைக் கழகங்களைப் பெருக்குவதிலே ஈடுபட வேண்டும் — பொதுத் தேர்தல் -- நெருங்கிக் கொண்டிருக்கிறது! — அதுபற்றிய முடிவுகளை நாடு நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறது! நெருக்கடி மிகுந்த எதிர்காலம்!**

பெரும் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். பெருந்தகையாளர் அண்ணாவின் ஆலோசனைகளும்—பெரும் வீரர் நெடுஞ்செழியனாரின் படை நடத்தும் பாங்கும்—பொதுக்குழுவின் செயல் முறைகளும்—எதிர்காலத்தை எழில் நிறைந்ததாக — ஒளி நிறைந்ததாக ஆக்கும் என்ற நம்பிக்கையோடு, புதிய பொதுக்குழுவை வாழ்த்துகிறோம்! புதிய செயலாளரை வரவேற்கிறோம்!

காயல் தந்த......

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

விழிக்குள்ளே கடல்வண்ணம் உடைய பெண்ணே!
விற்காதே இனிமேலும் உடலை. சென்ற
வழிதவறு. அதனுலே எடுத்து ரைத்தேன்.
வருந்தாதே திருந்திக்கொள். நீயோ கல்விச்
செழிப்புள்ள நெஞ்சத்தாள் இந்த நாட்டைச்
சீர்திருத்தப் பாடுபடு. உயிரைப் போன்ற
மொழிக்கெங்கே உன்சேவை? தமிழுக் காக
மூச்சறுந்து போதம்வரை தொண்டு செய்க!

அணிஇலக்க ணம்ஒன்று எழுதி, நாட்டுக்
களித்திடுக, எளியதமிழ்ச் சொல்லால் — என்றான்.
தணியாத தமிழ்ப்பற்று உடைய தாசி,
சம்மதத்தைத் தன்சொந்தத் தலையால் தந்தாள்.
பணக்காரத் தனங்காட்டும் இந்தக் காயல்
பட்டினத்தின் வரலாற்றைச், சங்க நூலுக்
கிணையாக நீயெழுதி வழங்க வேண்டும்
என்றிட்டான், கொடைவள்ளல். ஒப்பம் தந்தாள்.

அந்தபெருங் காவியத்தைக் குறித்து, இங்கே
அறிஞர்களின் முன்னிலையில் இரண்டோர் வார்த்தை;
தந்திரங்கள் செய்துவரும் ராமன் நாட்டோர்
தத்துவங்கள் ஒட்டுவதை வெட்டல் வேண்டும்
சிந்திக்கத் தூண்டட்டும் உன்நூல் என்றான்
சித்திரத்து அழகுடையாள், அவனை நோக்கி,
மந்திரமோ, கடவுள்இது எனவிளக்க
மரப்பாச்சி நூல்தனைவோ தரவே மாட்டேன்.

பாய்வார்த்தைப் பார்ப்பானின் பேச்சை நம்பப்
பாழாகும் தமிழர்களைத் திருத்தும்; நாட்டைச்
சாய்த்துவரும் கொள்கைதனை எனது ஏடு
தணல்மீது நிச்சயமாய்த் தள்ளும்; நானும்
காய்மாற்றும் கனியாவேன்; அறிஞர் போற்றும்
"நாக்கைபாடிரி"யாவேன் என்றாள். அந்த
வாய்ஓசை தனைக்கேட்டுச் சபையில் உள்ளோர்
வண்டிருந்த பூவேநீ வாழ்க என்றார்.

★




# இந்திப் படமெடுக்கும் : : : : : : தமிழ் முதலாளிகள் !

சமீப காலமாகத் தமிழ் நாட்டுத் திரைப்பட முதலாளிகள் ஒரு புது முயற்சியில் இறங்கியிருக்கிருர்கள். தமிழ், தெலுங்கு, மலையாள மொழிகளில் படங்கள் எடுத்து, அவைகளை இந்தி மொழியில் ஆக்கி, வடக்கே திரையிட்டு ஒரு சில முதலாளிகள் நல்ல வெற்றி பெற்றிருப்பது நாடறிந்த விஷயமேயாகும்.

முதன் முதலில் சந்திரலேகா என்ற தமிழ்ப் படம், இந்தியாக்கப்பட்டுவெற்றிபெற்றது- அடுத்து சில படங்கள் வெற்றி பெற்றிருக்கின்றன. சில தோல்வியுற்றிருக்கின்றன. தமிழில் எடுத்து, அதைப் பின்னர் இந்தியாக்கியதிலும், தமிழ் இந்தி இரண்டையும் ஏககாலத்தில் எடுப்பதிலும்—சில படங்களில் தோல்வி யேற்பட்டாலும்கூட நிச்சயம் அவர்களுக்கு நஷ்ட மேற்படவில்லை என்பதைக் குறிப்பிடாமலிருக்க முடியாது. கூடுமானவரையில் தமிழ் நடிகர்களையே முக்கிய பாத்திரங்களுக்கு இந்தியிலும் நடிக்க வைத்தார்கள். அதனுல் அந்த நடிகர்களுக்கு தமிழில் மட்டும் பத்தாயிரம் என்ருல், இந்திக்கும் சேர்த்து பதினைந்தாயிரம் என்று ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இதனுல் நடிகர்கள் வகையில் அதிகச் செலவில்லை. தமிழ் படத்திற்குப் போட்ட 'செட்'தான் இந்திப் படத்துக்கும் — இதே உடைதான் அதற்கும்! தமிழில் எழுதப்பட்ட வசனங்களை அப்படியே இந்தியிலும் (வேறு மொழியிலும்) மொழி பெயர்த்துக் கொண்டு, அந்த மொழி பெயர்ப்பு வசனகர்த்தாவுக்கு ஏதோ சிறு தொகை செலவு செய்தார்கள். தமிழ் வசனங்களை மொழி பெயர்ப்பதற்கு தமிழ் வசனகர்த்தாவுக்கு எந்தத் தொகையும் அளித்ததில்லை. அதோடு, அவர்களிடம், வேறு மொழியில் மொழிபெயர்க்க உரிமையும் பெற்றதில்லை. பாவம்; தமிழ் வசனகர்த்தாக்களும், "பழகிய நண்பராயிற்றே இந்தப் பட முதலாளி" என்ற பாச உணர்ச்சியோடு பொறுமையோடு உட்கார்ந்து கொண்டிருக்கிருர்கள்; உரிமைப் போருக்குத் தருணம் பார்த்துக் கொண்டு! எப்படியோ, தற்காலிகமாக இந்தத் தொல்லையும் இல்லாமல், இது போன்ற செலவுகளும் இல்லாமல்,குறைந்த செலவில் வேற்று மொழியிலும் தமிழ் நாட்டுப் படங்கள் வடக்கே சுற்றுப் பயணம் நடத்திக் கொண்டிருந்தன.

இப்போது, தமிழ்ப் படப்பிடிப்பாளர்கள் புதிய வழியிலே நடக்க ஆரம்பித்திருக்கிருர்கள். அவைகளில் ஒரு வழிதான்—தமிழில் எடுத்து வெற்றிகண்ட படங்களை இந்தியில் எடுக்கும்போது, இந்தி நடிகர்களை வைத்து எடுப்பது என்ற வழக்கம். பெரும்பாலும் இந்தி நடிகர்கள் நடித்து வெற்றி கண்ட படங்கள், வடநாட்டில் பவனி வரும்போது,அந்த வெற்றியை "யாருடைய வெற்றி?" என்று கூறிக்கொள்ள முடியாமல்—முடிவாக, ஒரு தனிப்பட்ட முதலாளியின் வெற்றியாக மட்டுமே கூறவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. காரணம்; படத்தின் வெற்றிக்குப் பெரும்பாலும் வடநாட்டு நடிக நடிகைகளே உதவியிருக்கிருர்கள் என்ற பேச்சு வடக்கே அடிபடுவதுதான்! தமிழ் நாட்டிலிருந்து செல்லும் இந்திப் படங்களால் வட நாட்டுப் பணம் இங்கே வந்து குவிகிறது என்று கூறுவாருமுண்டு! அதே நேரத்தில்–அப்படி வந்து சேரும் பணம், வட நாட்டு நடிகர்களுக்கும், நடிகைகளுக்கும், வசன கர்த்தாக்களுக்கும், இசையமைப்பாளர்களுக்கும், பங்கிட்டுத்தரப்படுகிறது— சம்பளமாக-என்பதையும் மறந்து விடக் கூடாது. வெற்றிபெற்ற படத்தினுல், அங்குள்ள தியேட்டர்காரர்களுக்கும், பட வினியோகஸ்தர்களுக்கும் ஏற்படும் லாபக் கணக்கையும் மறந்து விடக் கூடாது.

வடக்கேயிருந்து இறக்குமதியாகும் நடிக நடிகையர், எழுத்தாளர், இசையமைப்பாளர்களுக்கு தமிழைப் பார்த்து "காப்பி" அடிப்பதற்கு இரண்டு மூன்று பங்கு சம்பளமல்லவா அதிகமாகத் தரப்படுகிறது. ஆகவே, இதை எப்படி தமிழ்ப்பட உலகின் வெற்றி என்று துணிந்து கூறுவது?— இயலாது! இயலாது!!

இன்னும் ஒரு புதிய விபரீத வழியை சில தமிழ்ப்படகர்த்தாக்கள் கண்டுபிடித்திருக்கிருர்களாம்; கேள்விப்படுகிருேம். அதாவது இனிமேல் அவர்கள், தமிழ்ப்படம் எடுப்பதையே நிறுத்திவிட்டு முழுக்க முழுக்க இந்திப் படங்களே எடுக்கப் போகிருர்களாம்.

தமிழ் நாட்டிலே ஒரு தமிழ்ப் படம் எடுக்க நான்கு லட்ச ரூபாய் செலவாகிறதென்ருல், அந்தப் படத்தை ஓட்டுகிற தியேட்டர்கள் ஐநூறுக்குள்ளேதான் இருக்கின்றன. படம் பூரண வெற்றிபெற்ருல்தான் லாபம் காணமுடிகிறது. ஆகையால் இதே நாலு லட்சத்திற்கு ஒரு இந்திப்படமெடுத்தால் அந்தப்படம் ஓடுவதற்கு வடக்கே சுமார் இரண்டாயிரம் தியேட்டர்கள் இருக்கின்றன. படம், வெற்றிப்படமாக அமையாவிட்டாலும், பணத்திற்கு நஷ்டமில்லை; என்ற கணக்கைப் போட்டுக் காட்டுகிருர்கள்.

கணக்கு சரிதான்! சினிமாவிலும்கூட வடக்கு வளமாயிருக்கிறது என்ற புள்ளி விபரமும் ஒத்துக் கொள்ளக் கூடியதுதான்! ஆனுல், இந்தக் கணக்கைப்போட்டுக்காட்டி, இந்திப் படம் மட்டுமே எடுக்கக் காரணம் காட்டுகிற முதலாளிகள் யார்தெரியுமா? தமிழ்ப்படமெடுத்து, தலையிலே கைவைத்துக்கொண்டிருப்பவர்கள் அல்ல தமிழ்ப் படங்களின் மூலமாகவே பெரு வெற்றிபெற்று, பெருத்த் லாபங்கண்ட முதலாளிகள்— அவர்களுக்குத்தான் இந்த விபரீத ஆசை தோன்றியிருக்கிறது. ஸ்டுடியோ வசதிகளோடு படமெடுப்பவர்களுக்கு நாலு படத்தில் நஷ்டம் வந்தால், ஒரு படத்தில் வரும் லாபத்தால் அதைச் சரிக்கட்டிக் கொள்ள முடியும். நாலுபடத்தில் லாபம் வந்து, ஒரு படத்தில் நஷ்டம் வந்த ஸ்டுடியோ முதலாளிகளுக்கே இந்த விபரீத எண்ணம் தோன்றியிருப்பது ஆச்சரியமே–கலையுலகம், இவர்களைப் பார்த்துக் கேட்கிறது;

"கலைக்காகப் படம் எடுக்கிருேம் என்றீர்களே; இப்போது லாபக் கணக்குக்காட்டி இந்திப் படம் எடுப்பதே போதும் என்கிறீர்களே; ஏன் இந்த முரண்பாடு?" இந்தக் கலையுலகக் கேள்விக்கு அவர்களின் பதில் யாதோ அறியோம்.

தமிழ் நாட்டிலிருந்து, வெல்வேறு மொழிகளிலே படங்கள் எடுக்கப்பட்டு, அவை வெளிநாடுகளிலே வெற்றிக்கொடி நாட்டுவதை நாமும் வரவேற்கிருேம். ஆனுல் அந்த வெற்றி, ஒரு தனிப்பட்ட பட முதலாளியின் வெற்றியாக இல்லாமல், தமிழ் நடிகர்களின் வெற்றியாக, தமிழ் இசையமைப்பாளர்களின் வெற்றியாக, தமிழ்க் கலாசாரத்தின் வெற்றியாக. அமைய வேண்டுமென விரும்புகிருேம். அதோடு, தமிழ் படமெடுக்கும் முயற்சியை அறவே விட்டுவிட்டு, இந்திக் கடைத் தெருவில் நுழைய விரும்புவோர், தங்கள் கூடாரத்தையும்—வடக்கு நோக்கித் தூக்கிக் கொண்டு போகும்நிலை ஏற்படுவதற்குள்-அந்த விபரீத ஆசையை விட்டுவிட வேண்டுகிருேம்.

ஜீ

## வெள்ளி வீதி

### பராசக்தி

#### தெலுங்கில்

* பராசக்தியை தெலுங்கு மொழியிலே தயாரிக்கும் வேலையை ஏ. வி. எம். ஸ்டுடியோவில் நேஷனல் பிக்சர்சார் வழக்கம் போல் துரிதமாக நடத்தி வருகிருர்கள். இதில் சிவாஜி கணேசன், ஸ்ரீரஞ்சனி முதலியோர் முக்கிய பாகங்களில் நடிக்கிருர்கள். 'திரையுலக இரட்டையர்' எனப்படும் கிருஷ்ணன் பஞ்சுவின் திறமையான டைரக்ஷனிலே பராசக்தி தெலுங்கிலே உருவாகிறது.

#### இந்தியிலும்

* இந்தியில் பராசக்தி வரப் போகிறுள் என்பதற்காகவே, இதுவரை தமிழ் பராசக்தியைக் கூட வடக்கேயுள்ள தமிழர்களுக்கு (பம்பாய் போன்ற இடங்களில்) காட்டாமல் வைத்திருந்தார்கள். இப்போது இந்தியில் எடுப்பதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. வசனங்களை இந்தியில் அமைக்கவும், பாட்டுகள் இயற்றவும் புகழ் பெற்ற எழுத்தாளரான அரீந்திரநாத் சட்டோபாத்யாயா ஒப்பந்தம் செய்யப் பட்டிருக்கிருர். இந்தி பராசக்தியின் நடிகர் பட்டியல் இன்னும் வெளியாகவில்லை.

#### செல்லப்பிள்ளை

* சாதாரண பிள்ளைகளே அழைத்தவுடன் வருவதில்லை. செல்லப்பிள்ளை வருவதென்ருல் சாமான்யமா? அதுவும் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, ஆடிப் பாடி திறமையாக நடித்துள்ள அந்தப் படத்தை ரசிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்குவது இயற்கைதானே! ஏ. வி. எம். தயாரிப்பான இந்தப் படத்தை ராமன் டைரக்ட் செய்கிருர். விரைவில் வெளிவரும்.

#### அலிபாபா

* சேலம் மாடர்ன் தியேட்டர்ஸார் தங்களின் முதல் வர்ணப் படத்தை வெற்றிகரமாக வெளியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிருர்கள். புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். பானுமதி ஆகியவர்களடங்கிய நடிகர் பட்டியலையும் தயாரித்திருக்கிருர்கள். படத்திற்கான பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்படுகின்றன.டி. ஆர். சுந்தரமே இந்த முதல் வர்ணப் படத்தை டைரக்ட் செய்கிருர்.

## மொய்தீன் நினைவு விழா

ஜுபிடர் இரட்டையரில் ஒருவரான எஸ்.கே. மொய்தீன் சென்ற ஆண்டு மறைந்ததை யொட்டி, 17-4-55 காலை 10-மணிக்கு சென்னை நெப்ட்யூன் ஸ்டுடியோவில் சிறந்த முறையில் படத் திறப்புவிழா நடைபெற்றது. விழாவுக்கு திருப்பூர் நகரசபை தலைவர் பழனிசாமி அவர்கள் தலைமை வகித்தார். விழாவிற்கு வந்தோரை திரு எம். சோமசுந்தரம் வரவேற்ருர். எஸ். கே. எம். அப்துல்லா நன்றியுரை கூறினுர்.

★

# எழுத்தாணியின் கடைசிப் பக்கம்

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:
(●) துரை. முருகேசன்; காரமடை (கோவை மா.வ.)

மாணிக்கவாசகன்; திருப்பத்தூர்.
(?) கம்யூனிஸ்ட்கள் பணத்தை வெறுக்கிறார்களா? பணக்காரர்களை வெறுக்கிறார்களா?
இரண்டையுமே அவர்கள் எதிர்ப்பதில்லை. பணத்தை வெறுத்தால் இன்று 'ஜனசக்தி-நிதி' சேர்ப்பார்களா? பணக்காரர்களை வெறுத்திருந்தால் அன்று மாவூர் சர்மாவின் முன் மண்டியிட்டிருப்பார்களா?

(?) காமராசர் கல்லூரிக் கல்வி கற்றிருந்தால்...?
இப்போது முணுமுணுத்துக் கொண்டிருக்கும் சுப்ரமணியம் மூலையில் முடங்க வேண்டியிருக்கும்!

(●) துரை முருகேசன்; காரமடை
(?) கட்சிகளில் 'வௌவால்'கள் தோன்றக் காரணமென்ன?
சொந்தக் கட்சியிலே விடிவெள்ளி தோன்றிவிட்டது—எதிர்க்கட்சி மண்டபத்திலே இருள் மண்டிவிட்டது—என்கிற காரணத்தால்தான்!

ராமசாமி; முதுகுளத்தூர்.
(?) 'எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்' என்ன செய்து கொண்டிருக்கிறது?
அவ்வப்போது தெளிவாக வேலையற்றோர் பட்டியலை நாட்டுக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறது!

கருணாபரன்; யாழ்ப்பாணம்.
(?) முற்காலப் பெண்களின் தலைக்கும், இக்காலப் பெண்களின் தலைக்கும் உள்ள வித்யாசம் என்ன?
தலையிலேயுள்ள கூந்தலின் அளவு குறைந்திருக்கிறது. தலைக்குள்ளே இருப்பது வளர்ந்திருக்கிறது!

(?) மனைவியின் புன்னகைக்கும், குழந்தையின் புன்னகைக்கும் உள்ள வேறுபாடு என்ன?
ஒன்றில் பல் தெரியும்; இன்னொன்றில் ஈறு தெரியும்; அவ்வளவுதான்!

## மணி மகுடம்

* ஏராளமான நண்பர்கள் 'மணி மகுடம்' நாடகத் தொடர்ச்சி எப்போது வருமென்று கேட்டிருக்கிறார்கள்.

* அவர்களுக்கெல்லாம், ஜூன் மாதத்தில் திருச்சியில் மாநில மாநாடு நடக்கும் போது வெளிவர இருக்கும் 'முரசொலி மலரி'ல் மணி மகுடம் நாடகத்தின் மிகுதிப் பகுதியும் வெளிவருமென்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்

துரைராஜ்; டாளையங்கோட்டை.
(?) அறமிதென்றும், மறமிதென்றும் யாம் அருகிலாத போது—தமிழ் இறைவனுரின் திருக்குறளிலே ஒரு சொல்...—இதில் 'இறைவனுர்' என்பது ஆண்டவனையா குறிக்கிறது?
அல்ல; அல்ல! திருவள்ளுவனரை!

இராசன்; சுப்ரமணியபுரம்.
(?) காங்கிரஸ் கட்சியின் நிலச் சீர்திருத்தம் எப்படியிருக்கும்?
பள்ளத்தை மேலும் பள்ளமாக்கி, அதிலிருந்து வெட்டிய மண்ணைக் கொண்டு மேட்டு நிலத்தை மேலும் உயரமாக்குவார்கள்!

மணியன்; சோதியக்குடி.
(?) இரக்கம்—அன்பு: இவைகளுக்கு என்ன உறவு?
அவை இரண்டும் மனிதப் பண்பு என்னும் தாய்க்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகள்!

சந்தோஷம்; தூத்துக்குடி.
(?) மகாபாரதத்தைப் படித்துத்தான் கொக்கோகம் எழுதினார்களா?
ஆராய்ச்சிக்குரிய இந்தப் பிரச்னை பற்றி 'வியாசர் விருந்து' வழங்கிய ஆச்சாரியாரைத்தான் கேட்க வேண்டும்!

செல்வா; கண்டி இலங்கை.
(?) கார் மேகங்கள் ஏன் கருப்பாக இருக்கின்றன?
விடுதலை மழை பொழிய விரும்புபவர்கள் எப்போதும் கருப்பு ஆடைகளைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள்!

கண்ணன்; குடந்தை.
(?) உருவங்கட்கு இருப்பது போல நாட்டிற்கும் நிழல் உண்டா?
உண்டு! உண்டு! நல்லார் கையிலே நாடு இருக்கும் பொழுது அதன் நிழல் நீண்டிருக்கும்! நாசகாலராம் தேசியவாதியின் கையில் அதுகூட குறுகிப் போய் விடுகிறது.

சிங்காரம்; திருச்சி.
(?) ஓடிக்கொண்டிருக்கும் சமுதாய வண்டிக்கு சிகப்பு விளக்கு யாது?
நம் நாட்டைப் பொறுத்த வரையில் சிவப்பு விளக்கு காட்ட காரணமாயிருப்பது மத்திய ஆசியாவும் வடநாடும் ஏற்படுத்திய பிளவுதான்! இன்று சிகப்பு விளக்கை தூக்கிப் பிடித்துக் கொண்டிருப்பது திராவிடர் இயக்கம்!

## கொள்கை வளருது கோபுரம் போலே!

வேலூர்
1-5-55
(தோழமைக் கழக சார்பில்)
பேசுவோர்:
என். எஸ். இளங்கோ
முல்லை-சத்தி
அ. கருத்தோவியன்

## 'மே விழா'வில் நமது பொதுச் செயலாளர்

1-5-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு சென்னை, திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெறும் 'மே விழா' கூட்டத்தில் பொதுச் செயலாளருக்கு சென்னை மாவட்டக் கழகம் வரவேற்பளிக்க இருக்கிறது. அன்று பிற்பகல் 2 மணிக்கு திரு.வி.க.(கான்ரான்ஸ்மித்) திடலிலிருந்து ஊர்வலம் புறப்படும். ஊர்வலத்தில் தோழர் எஸ். எஸ் ராஜேந்திரன் அவர்கள் கலந்து கொள்வார்கள்.

—சென்னை மாவட்ட தி. மு. க.

## வடாற்காடு மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு.

வடாற்காடு மாவட்ட தி. மு. க. அவசரக் கூட்ட அழைப்பிதழ் என்ற பெயரில், சிலர் கையெழுத்திட்டு, துண்டு அறிக்கை யொன்று வெளியிட்டிருப்பதாக தெரிய வருகிறது. அந்த அறிக்கை வ. ஆ. மாவட்ட கழகத்தின் அனுமதியின் பேரில் வெளியிடப்பட்டதல்ல என்பதையும், மாவட்டக் கழகத்தின் அதிகாரப் பூர்வமான கூட்டமல்ல என்பதையும், மாவட்ட செயலாளர் என்ற முறையில் வ. ஆ. மாவட்ட தி. மு. கழக தோழர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

—முல்லை-சத்தி
செயலாளர்,
வ. ஆ. மாவட்ட தி. மு. கழகம்.

காதல்......

★ 10-ம் பக்கத் தொடர்ச்சி

ளோடு இரண்டு நாள் தங்கியிருந்தான்; அவனும் போய் விட்டான்; அவனது 'அத்தை மகள்' அவசர அழைப்பு அனுப்பினுள் என்று. நான் என்ன செய்வேன்? என் கடிதத்தை சுமந்து வந்தவன் பெற்ற பாக்கியம் கூட, கடிதம் எழுதிய நான் பெற முடியவில்லையே! அதிகமாகக் கடிதம் எழுதுவதிலும் இப்படி ஒரு ஆபத்து இருக்கிறது என்று எனக்குத் தெரியாமல் போய் விட்டதே—அப்போதே, அந்த ஜெர்மனியரின் குண்டுகள் என் தலையில் விழுந்திருக்கக் கூடாதா?


மே மாதம் 6-ம் தேதி முதல்

"திருவிடம்"

வார இதழாக வெளிவருகிறது!
ஆசிரியர் அழகண்ணல்
எழுதும்
சரிதம் தழுவிய நாடகம்
'அழகி நளினி'
ஆரம்பமாகிறது.
தனிப்பிரதி
விலை அணு ஒன்று
ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் ஏஜண்டுகள் தேவை
விபரங்களுக்கு:
நிர்வாகி:
திருவிடம்,
சென்னை-5



'முரசொலி' வழங்கும்

★ அடுத்த வார முரசொலி மே இதழாக மலர இருக்கிறது!

★ வழக்கம் போல எல்லாச் சிறப்புகளும் ஒருங்கே அமைந்திருக்கும்!

16-பக்கங்கள் — விலை 3 அணு

★

ஆசிரியர் மு. க. வின்

★ மீண்டும் வருகிறது—துரை மீண்ட கதையைச் சொல்கிறது!

★ புதிய வாசகர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில், நடந்த கதையும் தொடர்ச்சி கெடாமல் தோன்ற இருக்கிறது!

அதிகமான பிரதிகள் விரும்பும் விற்பனையாளர்கள் உடன் தெரிவிக்கவும்.